# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பாப்பிரெட்டிப்பட்டி,

தருமபுரி மாவட்டம் - 636 905.

# ஆண்டு மலர்

# 2025 - 2026

# பொருளடக்கம்


மலர்க்குழு -

மலர் முகம் -

இலக்கு, குறிக்கோள் (Vision, Mission) -

கல்லூரி முதல்வர் -

வாழ்த்துரைகள் -

கல்லூரி ஆண்டறிக்கை -

துறை நிகழ்வுகள் -

ஆசிரியர், மாணவ மாணவியர் படைப்புகள் -

## மலர்க்குழு



முனைவர் **வீ.இரவி,** எம்.எஸ்சி., எம்.பில்., பி.எட்., பிஎச்.டி.,

**முதல்வர் (மு.கூ.பொ)**



முனைவர் **பொ.செந்தில்குமார்,**
தமிழ் உதவிப்பேராசிரியர், சமூகவியல் துறைத்தலைவர் (பொ)



முனைவர் **ந.ரமேஷ்,**
ஆங்கில உதவிப்பேராசிரியர்



முனைவர் **இ.சுஜிதா,**
தமிழ் உதவிப்பேராசிரியர்



முனைவர் **கி.ச.கல்யாணி,**
நூலகர்

# மலர் முகம்

"படைப்பாற்றல் என்பது வேடிக்கையாக இருக்கும் நுண்ணறிவு"

- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

அன்பு வணக்கம்,

உங்கள் கரங்களில் இருப்பது எங்கள் பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 2025-2026-ம் கல்வி ஆண்டு மலர். ஒரு குழந்தையை நாளைய இளைஞர்களுக்கு விட்டுச் செல்லும் முழு பொறுப்பும், கல்வி முறைக்கு உண்டு என்பதை தெளிவுபடுத்துகின்ற திறன்மிகு ஆசிரியர்கள், சிறந்த நிர்வாகம், உத்வேகத்துடன் கூடிய மாணவர்கள் என இக்கல்லூரியின் பெருமைகளை கூறிக்கொண்டே செல்லலாம். நிலவின் அகலத்தை கை கொண்டு சுருக்குவதுபோல இவ்வாண்டு மலரின் கல்லூரி ஆற்றல்மிக்க செயல்பாடுகளை இம்மலரின் மூலம் வெளிப்படுத்தியுள்ளோம்.

இம்மலருக்கு மேலும் மணமூட்டும் வண்ணம், கல்லூரியின் கட்டமைப்பு வளர்ச்சி மேம்பாடு அனைத்தும் உயர்தரத்திற்கு கொண்டு வர உறுதுணையாக எங்களை வழிநடத்திட கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் வீ.இரவி அவர்கள் வாழ்த்துரை வழங்கி உள்ளார்கள் அவர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் (பொ) முனைவர் வி. ராஜி அவர்கள் வாழ்த்துரை வழங்கி உள்ளார்கள் அவர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

கல்லூரியின் செயலாற்றல்மிக்க துறைத்தலைவர்களும் பேராசிரியர்களும் இம்மலர் சிறக்கத், தேனீக்களாய்ச் செயல்பாடுகளைச் சேகரித்தார்கள். அவர்கள் அனைவருக்கும் இம்மலர்க்குழு நயத்தக்க நன்றிகளைச் சமர்ப்பிக்கிறது.

கல்லூரியின் நிர்வாகச் செயல்பாடுகளை நிரல்படத் தந்துதவிய கல்லூரி அலுவலக நண்பர்களுக்கு மிக்க நன்றிகள்.

ஆண்டுமலரை அலங்கரிக்கும் ஆர்வமுடன் எம்மாணவர்கள் தங்கள் திறமைகளைச் செதுக்கியளித்து உதவியுள்ளனர். மலர் சிறக்க தங்கள் படைப்புகளை வழங்கிய மாணவ மணிகளுக்கு (எமது) அன்பு வாழ்த்துக்கள்.

**மலர்க்குழு**

முனைவர் **வீ.இரவி,** முதல்வர் (மு.கூ.பொ)

முனைவர் **பொ.செந்தில்குமார்**

முனைவர் **ந.ரமேஷ்**

முனைவர் **இ.சுஜிதா**

முனைவர் **கி.ச.கல்யாணி**

**இலக்கு :**

சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள மாணவர்களை, திறன் மேம்பாடு, ஆற்றல், விவேகம் மற்றும் திறமைபெற்ற சமூக சிந்தனை, குடிமை பொறுப்பு,மற்றும் தேசிய உணர்வு கூடிய தனி மனிதர்களாய் உருவாகிடும்வண்ணம், தரமான உயர்க் கல்வியினை வழங்குதல்.

**குறிக்கோள் :**

1. தொழில் நுட்பம் இணைக்கப்பெற்ற கற்றல்முறைகளின் வழியே, ஒருமுழுமையான கல்விச்சூழலையும், ஆராய்ச்சி நுண்திறனையும் அளித்து, உரம் ஊட்டுதல்.

2. மாணவர்களுக்கு வாழ்வியல் மற்றும் வேலை வாய்ப்பிற்கு தேவையான திறன்களை மேம்பட செய்து, அவர்களின் சொந்த எல்லைகளை உள்ளூரிலிருந்து உலகிற்கு விரிவடையச் செய்தல்.

3. தொழில் நேர்மையுடன், நிபுணத்துவம் பெற்ற தனிமனிதர்களாக மலரும் வண்ணம், சிறந்த பண்பு நலன்களை பெறச்செய்தல்.

4. பொறுப்புணர்வும், கடமையுணர்வும் பெற்ற குடிமக்களாக மாணாக்கர்களை பரிணமிக்க செய்தல்.

## VISION :

To impart quality higher education to socially and economically underprivileged students so as to transform them into skilled, proficient, sensible and competent indiviuals with social sensitivity, civil responsibility and national consciousness

## MISSION :

1. To empower with a holistic academic ambience and research acumen through techno - integrated teaching pedagogy.

2. To equip students with life and employability skills expanding the margins from local to global.

3. To inculcate sustainable values to bloom into distinct personals with professional integrity.

4. To enable students evolve into responsible and committed citizens.

# கல்லூரி முதல்வர்



முனைவர் **வீ.இரவி,** எம்.எஸ்சி., எம்.பில்., பி.எட்., பிஎச்.டி.,

**முதல்வர் (மு.கூ.பொ)**

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# Government Arts and Science College

பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

Recognition of college under 2(f) & 12(B) of the UGC Act, 1956

E-Mail : prucaspappireddipatti@gmail.com     Phone : 04346 - 246212.

முனைவர் **வீ.இரவி,**
எம்.எஸ்சி., எம்.பில்., பி.எட்., பிஎச்.டி.,
**முதல்வர் (மு.கூ.பொ)**



தேதி : 10.04.2026

## வாழ்த்துரை

கல்வி என்பது மனித வாழ்வின் அடிப்படைத் தூணாகும். அது ஒருவருக்கு அறிவை மட்டுமல்லாது, ஒழுக்கம், பண்பாடு, பொறுப்புணர்வு, தலைமைத்துவம் மற்றும் மனிதநேயத்தையும் வழங்குவகிறது. கல்வி கற்ற மனிதன் தனது குடும்பத்தையும் சமூகத்தையும் நாட்டையும் முன்னேற்றும் ஆற்றலைப் பெறுகிறான். அந்த வகையில் உயர்கல்வி நிறுவனங்கள் மாணவர்களை எதிர்காலச் சமூகத்தின் சிறந்த குடிமக்களாக உருவாக்கும் உன்னதப் பொறுப்பை ஏற்று செயல்பட்டு வருகின்றன.

எங்கள் கல்லூரி தொடங்கப்பட்ட நாள் முதல் கல்வித் தரம், ஆராய்ச்சி மேம்பாடு, மாணவர் நலன் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகள், தொழிற்துறைப் பயணங்கள், வேலைவாய்ப்பு பயிற்சிகள், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

ஆண்டுமலர் என்பது கல்லூரியின் சாதனைகளைப் பதிவு செய்யும் ஒரு வரலாற்றுச் சுவடாகும். மாணவர்களின் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஓவியங்கள், புகைப்படங்கள் மற்றும் படைப்பாற்றல்மிக்க சிந்தனைகள் இதில்

இடம்பெறுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இப்பதிவுகள், மாணவர்களின் திறமைகளை வெளிகாட்டுகிறது. இப்பதிவுகள் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதோடு, எதிர்காலத் தலைமுறைகளுக்கும் ஊக்கமளிக்கும் ஆவணமாக அமையும்.

ஒரு கல்வி நிறுவனத்தின் வளர்ச்சி அதன் கட்டிடங்களாலும் வசதிகளாலும் மட்டுமல்ல; மாணவர்களின் சாதனைகளாலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பாலும் அளவிடப்படுகிறது. அந்த வகையில் எங்கள் கல்லூரி கல்வி, ஆராய்ச்சி, பண்பாடு மற்றும் சமூகப் பொறுப்பு ஆகிய அனைத்து துறைகளிலும் முன்னோடியாக திகழ்ந்து வருகிறது.

மகாகவி பாரதியார் கூறியுள்ள,

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்"

என்ற வரிகள் மாணவர்களின் வாழ்விற்கு வழிகாட்டியாக அமைவது போல உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து, அவற்றை அமைவதற்காக விடாமுயற்சியுடன் செயல்பட வேண்டும். திருவள்ளுவர் கூறும், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்ற வாக்கின்படி அறிவே மனிதனின் மிகப்பெரிய செல்வம் என்பதை மாணவர்கள் உயர்ந்து தொடர்ந்து கற்றலிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட வேண்டும்.

இந்த ஆண்டுமலர் அனைவராலும் பாராட்டப்படும் சிறப்புமிக்க வெளியீடாக அமைய என் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க கல்வி ! வளர்க அறிவியல் !

உயர்க மாணவர் சமுதாயம் !



**முதல்வர் (மு.கூ.பொ)**

## கல்லூரி ஆண்டறிக்கை (சுருக்கமாக)

சேலம் உள்ளடங்கிய தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய மாவட்ட மாணவர்கள் உயர்கல்வி பயிலும் வகையில் சேலத்தை மையமாகக் கொண்டு, 1997 செப்டம்பர் 17-ல் பெரியார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. இந்நாள் வரை உயர்கல்வியில் பல்லாயிரம் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டும் பல்கலைக்கழக நிதி நல்கலைக்குழும் பாராட்டும் விதமாகவும் செயல்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், பொம்மிடி, கடத்தூர் பகுதிகளைச் சேர்ந்த மாணவ சமுதாயத்திற்குக் கிடைத்ததற்கு அரிதாக இருந்த, உயர்கல்வி அனைவருக்கும் கிடைக்கும் வகையில் பாப்பிரெட்டிப்பட்டியை மையமாகக் கொண்டு பெரியார் பல்கலைக் கழகம் நான்காவது உறுப்புக் கல்லூரியாக 2011-ஆம் ஆண்டு "பெரியார் பல்கலைக் கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி"யைத் தொடங்கியது. பி.ஏ (தமிழ்), பி.ஏ (ஆங்கிலம்), பி.காம், பி.எஸ்சி (கணிதம்), பி.எஸ்சி (கணினி அறிவியல்) ஆகிய ஐந்து பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்பட்டது. 2016 - 2017 ஆம் கல்வியாண்டில் பி.எஸ்சி (இயற்பியல்) பாடப்பிரிவும் 2017-2018ஆம் கல்வியாண்டில் எம்.ஏ (தமிழ்), எம்.ஏ (ஆங்கிலம்) எம்.எஸ்சி (கணிதம்) ஆகிய மூன்று முதுநிலைப் பாடப்பிரிவுகளும் தொடங்கப்பட்டது. 2020-2021 ஆம் கல்வியாண்டில் பி.ஏ (சமூகவியல்) பாடப்பிரிவு தொடங்கப்பட்டது. 2021 - 2022 கல்வியாண்டில் எம்.எஸ்சி (கணினி அறிவியல்) எனும் முதுநிலைப் பாடப்பிரிவும் தொடங்கப்பட்டது.

2021 - 2022 ஆம் கல்வியாண்டில் (தமிழ்த்துறைத் தமிழாய்வுத்துறையாக) முனைவர் பட்டம் முழுநேரம் / பகுதிநேரம் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெறுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் 2011-ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாகத் தொடங்கப்பட்டு மாணவர்களின் நலன் கருதி 2020-ஆம் ஆண்டு முதல் அரசு கல்லூரியாக மாற்றப்பட்டது சிறப்பிற்குரியதாகும்.

2025 - 2026 ஆம் கல்வி ஆண்டு முதல் இளம் அறிவியல் கணிதம் B.Sc., Maths மற்றும் இயற்பியல் B.Sc., Physics பாடப்பிரிவுகள் தமிழ் வழியில் பயில ஆணைபெற்று மாணவர்கள் சேர்க்கை பெற்று வருவது சிறப்பாகும்.

இன்று, 7 இளநிலைப் பாடப்பிரிவுகளும் 4 முதுநிலைப் பாடப்பிரிவுகளும், 1 முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்பும் செயல்பட்டு வருகின்றன. இக்கல்வியாண்டில் 950 மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றனர். 15 நிரந்தரப் பேராசிரியர்களும், 29 கௌரவ விரிவுரையாளர்களும், 10 அலுவலகப் பணியாளர்களும் 3 PTA ஆசிரியர்களும், 1 CLP ஆசிரியரும் பணிபுரிவது சிறப்புக்குறியதாகும்.

## முதுகலைத் தமிழாய்வுத்துறை

நம் கல்லூரியில் நடைபெற்ற “அகில இந்திய மகாத்மா காந்தி சமூகநலப் பேரவை” சார்பாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் சி.சீதா தமிழ்த்துறை மாணவி இரண்டாமிடம் பெற்றார்.

01.09.2025ல் தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய “அறிஞர் அண்ணா பிறந்தநாள்” பேச்சுப்போட்டியில் தமிழ் இரண்டாமாண்டு மாணவி சி.சீதா மூன்றாமிடம் மற்றும் ரூ.2000 பரிசுத் தொகையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்.

26.09.2025-ல் தருமபுரியில், “புது யுகம் தொலைக்காட்சி நிலையம்” நடத்திய “சவாலே சமாளி” பேச்சரங்கத்தில் சி.சீதா தமிழ்த்துறை மாணவி பங்கேற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்.

தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் “தகடூர் புத்தகப் பேரவை” நடத்திய போட்டிகளில் மாணாக்கர்கள் சி.சீதா, அ.அபிசேக் மதன் சர்மா ஆகியோர் பங்கேற்றனர். மாணவி சி.சீதா பேச்சுப்போட்யில் மூன்றாமிடம் பெற்றும் மேலும் 05.10.2025 அன்று தருமபுரி மதுராபாய் திருமண மஹாலில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் புத்தகங்களை பரிசாக பெற்றார்.

07.10.2025 அன்று, தமிழ் வளர்ச்சித்துறை, அதியமான் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடத்திய மகாத்மா காந்தி பிறந்த நாள் போட்டியில் சி.சீதா, அ.அபிசேக் மதன் சர்மா ஆகியோர் பங்கேற்றனர்.

08.10.2025 அன்று தமிழ் வளர்ச்சித்துறை, அதியமான் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடத்த “நேரு பிறந்தநாள்” பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு மாணவி சி.சிதா இரண்டாமிடம் பெற்று ரூ.3000/- பரிசுத்தொகையும் பெற்றார்.

விழுப்புரம் மாவட்டம், மயிலத்தில் அமைந்துள்ள ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 07.10.2025 முதல் 09.10.2025 வரை நடைபெற்ற “தமிழால் முடியும் வாழ்க்கை எனும் வழிகாட்டி பயிற்சியில்” மாணவர் இரா.சஞ்சய் கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.

15.10.2025 ல் தருமபுரி, அரசு கலைக் கல்லூரியில் தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய “நிகழ் நேர போட்டியில்” சே.மோனிஷா, சி.சீதா, அ.அபிசேக் மதன்சர்மா ஆகியோர் பங்கேற்றனர், அதில் சி.சீதா, பேச்சுப்போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று மற்றும் ரூ.1000 பரிசுத்தொகை பெற்றார். சே.மோனிஷா, கட்டுரைப்போட்டியில் மாவட்ட அளவில் மூன்றாமிடம் பெற்றும் மேலும் ரூ.5000 பரிசுத்தொகை பெற்றார்.

முனைவர் இ.சுஜிதா, உதவிப்பேராசிரியர் திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகத்தில், UGC மாளவியா மிஷன் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் 03.10.2025 முதல்

16.10.2025 வரை நடத்திய, இணையவழியிலான தமிழ்மொழி மற்றும் இலக்கிய புத்தகப் பயிற்சியில் பங்கேற்றார்.

25.10.2025 அன்று, கோவையில் நடைபெற்ற "சன் தொலைக்காட்சி அரட்டை அரங்கத்தில்" மாணவி சி.சீதா பங்கேற்றார்.

28.10.2025 அன்று, தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற "இளம் நுகர்வோருக்கான விழிப்புணர்வு புத்தகப் பயிற்சி"யில் மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

04.12.2025 அன்று சேலம் சாரதா கல்லூரியில் "கம்பன் கழகம்" நடத்திய பேச்சுப்போட்டியில் மாணவி சி.சீதா பங்கேற்றார்.

09.12.2025 அன்று நாட்டு நலப்பணித்திட்டம் சார்பாக அரூர் AMS கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளில் தமிழ்த்துறை மாணவர்கள் சே.மோனிஷா, விஜயகுமார் குழு, சி.சீதா. ப.நாகஜோதிகா, மா.ஶ்ரீதர் ஆகியோர் பங்கு பெற்றனர். அதில் சே.மோனிஷா, கவிதைப் போட்டியில் முதலிடமும், சி.சீதா பேச்சுப்போட்டியில் இரண்டாமிடமும், விஜயகுமார் குழு, கிராமிய நடனத்தில், மூன்றாமிடமும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

03.01.2026 முதல் 09.01.2026 வரை கும்பகோணம் "கோவிலாச்சாரி அன்னை கல்வி குழுமத்தில்," தமிழ் வளர்ச்சித்துறை, சார்பாக நடைபெற்ற இளந்தமிழர் இலக்கியப் பயிற்சி பட்டறையில சே.மோனிஷா, சி.சீதா ஆகியோர் பங்கேற்று பயிற்சி பெற்றனர். மாநில அளவில் மூன்றாமிடமும் ரூ.2000 பரிசுத் தொகையும் பெற்றார்.

19.01.2026 அன்று தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் வள்ளளார் மன்றம் சார்பாக நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான போட்டிகளில் மாணவர்கள் சே.மோனிஷா, ச.திவ்யா, மா.ஶ்ரீதர் ஆகியோர் பங்குபெற்றனர். அதில் ஓவியப்போட்டியில் ச.திவ்யா இரண்டாம் நிலையும் மா.ஶ்ரீதர் மூன்றாம் நிலையும் பெற்றனர். இம்மாணவர்கள் ராணிப்பேட்டை ரத்னகிரி முருகன் கோயிலில் 01.02.2026 அன்று நடைபெற்ற மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்றனர்.

14.02.2026 அன்று சேலம், சென்ட்ரல் சட்டக் கல்லூரியில் நடைபெற்ற "சமூக ஊடகங்களின் மாயை - நலன் மற்றும் எதிர்வினை என்ற பொருண்மையில் நடந்த மாநில அளவிலான பேச்சரங்கத்தில் இறுதி சுற்றுக்கு மேம்பட்டு, மாணவி சி.சீதா கோப்பையை வென்றார்.

04.03.2025 அன்று, "அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி"யில் உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்கத்தில் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பங்கேற்று சான்றிதழ் பெற்றனர்.

16.03.2026 அன்று, "நான் முதல்வன் திட்டத்தின்" மூலம் பெரியார்

பல்கலைக்கழகத்தில் “Hackthon Level-3 ல் கலந்து கொண்டு தமிழ்த்துறை இளங்கலை மூன்றாமாண்டு மாணவர்கள் ச.அருள்பிரியா, சி.லித்திகா, மே.பர்சானா, கா.சந்துரு, கு.நந்தகுமார் ஆகியோர் கலந்துக் கொண்டு ஆறாம் இடமும் நிறுவன பணிநியமன ஆணையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

24.03.2026 அன்று நடைபெற்ற தமிழ் இலக்கிய மன்ற விழாவில் சூளகிரி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, முதுகலைத் தமிழாசிரியர் முனைவர் மு.மணிமாது அவர்கள் இலக்கியத்தில் மானுடம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்

## ஆங்கிலத் துறை

முனைவர் ந.ரமேஷ் அவர்களின் மேற்பார்வையில் பகுதி நேர ஆராய்ச்சி மாணவர் சி.ரமேஷ் 23.12.2025 அன்று முனைவர் பட்டம் பெற்றார்.

15.10.2025 அன்று சேலம் ஸ்ரீ சக்தி கைலாஷ் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கருத்தரங்கு Hackathon 2025 ‘கனவு பாதை’ என்ற நிகழ்ச்சியில் மாணவ-மாணவிகள் பங்கேற்றனர்.

மாணவர்கள் A.வசந்தகுமார், V.கோபிகா, A.மனோ. N.தமிழ்ச்செல்வன், S.நித்தீஷ், R.விஷ்ணுப்பிரியா, S.ரஞ்சித்குமார், J.அபினாஷ் தருமபுரி, சேலம் சட்டக்கல்லூரி, ராசிபுரம், சேலம் பனமரத்துப்பட்டி ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநில அளவிலான மாரத்தான் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வென்றனர்.

முதுகலை முதலாம் ஆண்டு மாணவர் ஏ.கனிஷ்கர், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேச்சுப்போட்யில் இரண்டாம் பரிசும், கருத்தரங்கில் 3-ஆம் பரிசும், கொத்தடிமைகள் ஒழிப்பு பேச்சுப் போட்டியில் 1-ம் பரிசும், மேலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசுகளையும் மற்றும் இசைக்கருவி வாசித்தல் போட்டியில் முதல் பரிசும் வென்றார்.

30.01.2026 மற்றும் 31.01.2026 அன்று துறைத்தலைவர் முனைவர். இரா.புருஷோத்தமன், கேரள மாநில ஆலப்புழாவில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் Chair Person ஆக பங்கேற்றார்.

முனைவர். ந.ரமேஷ் அவர்கள் 29.08.2025 அன்று தளி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இலக்கிய மன்றத்தின் சார்பாக நடத்தப்பட்ட நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக சென்று சிறப்புறையாற்றினார்.

29.09.2025 அன்று முனைவர் இரா.புருஷோத்தமன் மற்றும் திருமதி.ச.சோ.சித்ராதேவி அவர்கள் அரூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்கு நடுவர்களாக சென்றனர்.

திரு. T.கோகுலக்கண்ணன் அவர்கள் 01.08.2025 அன்று ஊத்தங்கரை அதியமான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்புரையாற்றினர்.

23.03.2026 அன்று, நடைபெற்ற ஆங்கில இலக்கிய மன்ற விழாவில் முனைவர் ஸ்ரீ பா.தேவராஜன், அரசு கலைக்கல்லூரி சேலம்-7 ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் அவர்கள் LITERATURE IN ENVIRONMENT என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**வணிகவியல் துறை**

கடந்த 29.12.2025 மற்றும் 30.12.2025 ஆகிய இரண்டு நாட்கள் நிதி நிலைக்கல்வி பயிற்சி வகுப்புகள் மாணவர்களுக்கு நடைப்பெற்றது. இப்பயிற்சி வகுப்பிற்கு மும்பை பங்குச் சந்தையின் அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளர் திரு. S.அரிச்செல்வம் என்பவர் கலந்துக்கொண்டு பங்குச் சந்தையில் எவ்வாறு நேரடி நிதி முதலீடு செய்வது என்றும், மேலும் அதனுடைய நன்மைகள் பற்றியும் தெளிவான விளக்கத்துடன் விவரித்துக் கூறினார்.

**சமூகவியல் துறை**

கலைத்திருவிழாவில் நடைபெற்ற போட்டிகளில் சமூகவியல் துறை மூன்றாமாண்டு மாணவிகள் ஸ்ரீஷா மற்றும் வினோதா இருவரும் நடனப் போட்டியில் இரண்டாம் பரிசும், மாணவிகள் ஸ்ரீஷா, விளாஷினி, மஹேஸ்வரி மற்றும் வாசுகி அகியோர் விவாத மேடை போட்டியில் முதலாம் பரிசும், மாணவிகள் ஸ்ரீஷா, விளஷினி, வினோதா, செல்வலட்சுமி, சத்யலட்சுமி, சத்யலட்சுமி, நதினி மற்றும் சுமித்ரா ஆகியோர் பேஷன் டிசைனிங் போட்டியில் இரண்டாம் பரிசும், மாணவிகள் செல்வலட்சுமி, சத்யலட்சுமி, விளாஷினி மற்றும் தனலட்சுமி ஆகியோர் புதையல் வேட்டை போட்டியில் முதலாம் பரிசும், மாணவி கீர்த்திகா கைவினைப் போட்டியில் இரண்டாம் பரிசும், மாணவி ரம்யா நடனப்போட்டியில் முதலாம் பரிசும், மாணவிகள் பாட்டு போட்டியில் இரண்டாம் பரிசும், பெற்றுள்ளார்கள்.

மகளிர் தின விழாவில் நடைபெற்ற போட்டிகளில் சமூகவியல் துறை மூன்றாமாண்டு மாணவிகள் ஸ்ரீஷா மற்றும் வினோதா, இருவரும் நடனப் போட்டியில் முதலாம் பரிசும், மாணவி ரம்யா பாட்டுப் போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளார்கள்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டி நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் சமூகவியல் துறை முதலாம் ஆண்டு மாணவி ஸ்ரீமதி இரண்டாம் பரிசும் பெற்றுள்ளார்.

சாலை பாதுகாப்பு தினத்தையொட்டி நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் சமூகவியல் துறை முதலாம் ஆண்டு மாணவி ஸ்ரீமதி இராண்டாம் பரிசும் பெற்றுள்ளார்.

25.03.2025 அன்று சமூகவியல் துறை M.N.ஸ்ரீனிவாஷ் மன்றம் சார்பாக The Role of Sociolgist Today என்ற தலைப்பில் "ஒரு நாள் பயிற்சிப் பட்டறை" நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் HELP NGO இயக்குநர் திரு. P.கருணாமூர்த்தி, அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

**கணிதவியல் துறை**

"இராமானுஜன் கணித மன்றத்தின்" சார்பாக 22.12.2025 அன்று இராமானுஜன் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவின் சார்பாக மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி மற்றும் Paper presentations நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழுங்கப்பட்டது.

30.01.2026 அன்று "International Workship on Applied Mathematics for Computational and Experimental Physics" நடைபெற்றது. இதில் Prof Kutsukake Kentaro Japan அவர்கள், முனைவர் M.சீனிவாசன், சென்னை அவர்கள் மற்றும் முனைவர் ஆ.செந்தில்குமார் அவர்களும் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கணிதவியல் துறையில் பணிபுரியும் முனைவர் கோ.ஜயப்பன் மற்றும் முனைவர் இரா.ஜெயராமன் ஆகிய இருவரும் தலா ஒரு முனைவர் பட்ட ஆய்வு மாணவர் ஆய்வறிக்கையை பெரியார் பல்கலை கழகத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

கணிதவியல் துறையில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி பு.அபித்ரா அவர்கள் 05.02.2026 அன்று தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். மேலும் 19.01.2026 அன்று தருமபுரியில் மாவட்ட அளவில் நடைப்பெற்ற கட்டுரைப்போட்டியில் இரண்டாமிடம் பெற்றுள்ளார்.

17.02.2026 சென்னை (புதுயுகம் தொலைக்காட்சியில்) தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக மாநில அளவில் குறள் வினாடி-வினா போட்டியில் பங்கு பெற்று சிறப்பிடம் பெற்றுள்ளார்.

24.03.2026 அன்று இராமாஜன் கணித மன்ற விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக முனைவர் ரா. ரமேஷ் உதவிப்பேராசிரியர் கணிதவியல் துறை சோனா தொழில் நுட்பக் கல்லூரி சேலம் அவர்கள் கலந்துகொண்டு DIFFERENTIAL EQUATIONS AND ITS APPLICATIONS என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**இயற்பியல் துறை**

16.09.2025 நமது கல்லூரியில் நடைபெற்ற கலைத்திருவிழாவில் மாணவர்கள் மு.லோகேஷ் "வாழ்க்கையின் இசை" என்னும் போட்டியில் இரண்டாம் பரிசும் கவிதைப் போட்டியில் மு.மோகனப்பிரியா முதல் பரிசும், "கவனிக்க மறந்த காட்சிகள்" போட்டியில்

M.வெங்கடேஷ் முதல் பரிசும் தற்காப்புக் கலைப் போட்டியில் M.கௌதம் இரண்டாம் பரிசும் பட்ஜெட் போர் என்னும் விவாத மேடைப் போட்டியில் T.விக்னேஷ் A.மதன் M.கௌதம் ஆகியோர் மூன்றாம் பரிசு பெற்றனர்.

C.லிவ்யா முதல் பரிசும் பாடல் வரிகள் எழுதும் போட்டியில் S. தனலட்சுமி மூன்றாம் பரிசும் குறும்பட போட்டியில் V.ஸ்ரீநிதி, S.நித்யா, K.அபிதா, T.அன்பரசி ஆகிய மாணவிகள் முதல் பரிசும் G.கிரிதரன், S.அஸ்வின்குமார், R.சச்சின், C.லோகேஸ்வரன், R.ரோகித்ஸ்ரீ, தினேஷ், K.முத்துமாரியப்பன், M.செந்தமிழ், கனிமொழி, R.சுரேஷ்குமார் ஆகிய மாணவர்கள் இரண்டாம் பரிசு பெற்றனர்.

21.10.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான கைப்பந்து போட்டியில் மாநில அளவில் மாணவி V.ஸ்ரீநிதி கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றார்.

27.01.2026 தமிழ்நாடு அரசின் இது நம்ம ஆட்டம் திட்டத்தின் கைப்பந்து போட்டியில் மாணவி ஏ.ஸ்ரீநிதி கலந்து கொண்டு முதல் பரிசாக ரூபாய் 27,000, ரொக்கமும், சான்றிதழும் பெற்றார்.

28.01.2026 தமிழ்நாடு அரசின் இது நம்ம ஆட்டம் திட்டத்தின் கபடி போட்டியில் மாணவிகள் V.ஸ்ரீநிதி, B.ரவினாஸ்ரீ, P.தாரிகா ஆகியோர் கலந்து கொண்டு மூன்றாம் பரிசாக ரூபாய் 3000 சான்றிதழும் பெற்றனர்.

11.02.2026 அன்று நமது கல்லூரியில் நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில் INDIQ SOLUTIONS - CHENGAL PATTU என்ற நிறுவனத்தில் ஆறு மாணவர்களும் ஒன்பது மாணவிகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

25.02.2026 முதல் 26.02.2026 ஏபிஜே அப்துல் கலாம் மன்றமும் முன்னாள் மாணவர்கள் சங்கமும் இணைந்து தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு இரண்டு நாட்கள் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இந்நிகழ்வின் முதல் நாளான 25.02.2026 அன்று கோயமுத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இயற்பியல் துறை இணைப் பேராசிரியர் J.விவேகானந்தன் அவர்கள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலான சூரிய ஆற்றல் பற்றிய உரை நிகழ்த்தினார்.

இரண்டாம் நாள் 26.02.2026 HANDS-ON TRAINING SOLAR PHOTOVOLTAIC SYSTEM DESIGNING AND INSTALLATION TECHNOLOGY பயிற்சி வழங்கப்பட்டது.

18.03.2026 அன்று கல்லூரியில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு என்னும் தலைப்பில் 30 நிமிடம் காட்சிப்பதிவில் (REELS) அஸ்வின் குமார், மீனாட்சிசுந்தரம் ஆகிய மாணவர்கள் இரண்டாம் பரிசாக ரூ.3000 பெற்றனர்.

## கணினி அறிவியல் துறை

30.01.2026 அன்று கணினி அறிவியல், இயற்பியல் மற்றும் கணிதவியல் துறைகளின் சார்பாகவும் “Applied Mathematics for Computational and Experimental Physics” என்ற தலைப்பில் பன்னாட்டு பயிற்சி பட்டறை நடைபெற்றது. இதில் ஜப்பான் நாட்டின் நகோய பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் K.கேன்டாரோ மற்றும் சென்னை SSN கல்லூரியின் இயற்பியல் துறையின் ஆராய்ச்சி விஞ்ஞானி முனைவர் M.சீனிவாசன், முனைவர் M.செந்தில்குமரன் ஆகியோர் பங்குபெற்று மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார்கள்.

2025 ஆண்டு செப்டம்பர் மாதம் தருமபுரியில் 7-ஆம் ஆண்டு புத்தகத்திருவிழா சார்பாக நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பங்கேற்று செல்வி அ.ஜோதிலட்சுமி மாவட்ட அளவில் இரண்டாம் பரிசு பெற்றார்.

திருக்குறள் அறிவுசார் போட்டிகளில் விவாத மேடை தலைப்பில் கி.ஜெயப்பிரகாஷ் முதலிடம் பெற்று ரூ. 4500 பரிசு வென்றார்.

05.02.2026 முதல் 12.02.2026 வரை சங்ககிரி விவேகானந்தா பெண்கள் கல்லூரியில் தேசிய அளவில் நடைபெற்ற NSS பயிற்சிபட்டறையில் மா.ரவிவர்மா பங்கு பெற்று பயிற்சி பெற்றார்.

2025 டிசம்பர் மாதம் தருமபுரி கலைக்கல்லூரியில் நடைபெற்ற வள்ளலார் காட்டிய சமத்துவ பாதை என்றும் தலைப்பில் பேச்சு போட்டியில் கி.ஜெய்பிரகாஷ் மாவட்ட அளவில் இரண்டாம் இடம் வென்றார்.

தமிழ்நாடு மாநில திட்டக்கமிஷன் ICT ஹேக்கத்தான் திட்ட அடிப்படையிலான கற்றல் திட்டத்தில் சுமார் 197 மாணவர்கள் 100 மணிநேர சுய கற்றலும் பயிற்சியும் பெற்றனர். துறைத்தலைவர் முனைவர் வெ.சங்கிதா அவர்கள் இந்நிகழ்வினை ஒருங்கிணைந்தார்.

நமது கல்லூரியின் NIRF மற்றும் E Governance ஆகிய தகவல்கள் துறைத் தலைவர் முனைவர் வெ.சங்கீதா அவர்களின் ஒருங்கிணைப்பில் சிறப்பாக செல்படுகிறது.

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் (TANSCHE) சார்பாக சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் Outcome Based Education (OBE) என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது. உதவிப்பேராசிரியர் திரு. த.அருண்நேரு பயிற்சி பெற்றார்.

2025 செப்டம்பர் 1 முதல் 13 வரை பல்கலைக்கழக மானியக்குழு (UGC) சார்பாக

ராஜஸ்தான் மாநிலத்தின் நாக்பூர் மாளவியா மிஷன் ஆசிரியர் பயிற்சி மைத்தில் இணைவழியில் புத்தகப்பயிற்சி "Artificial Intelligence Tools" என்ற தலைப்பில் நடைபெற்றது. துறைத்தலைவர் முனைவர் வெ.சங்கீதா பங்கு பெற்று பயிற்சி பெற்றார்.

25.03.2026 அன்று நடைபெற்ற கணினி அறிவியல் துறை மன்ற விழாவில் சிறப்பு விருந்தினராக முனைவர் D.கவிதா Vice Principal, Sri Vidya Mandir arts & Science College, Uthangarai அவர்கள் கலந்து கொண்டு Generative AI and IOT என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**உடற்கல்வித்துறை**

பெரியார் பல்கலைக்கழக ஆளுகைக்கு உட்பட்ட கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகளில் நமது கல்லூரி மாணவர்கள் கபடி மற்றும் தடகளப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பான முறையில் விளையாடி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். நம் கல்லூரியின் இளம் அறிவியல் கணினி அறிவியல் இரண்டாமாண்டு மாணவன் V.மாதப்பன் 10000 மீட்டர் Long distance race-யில் 7ஆம் இடமும் மற்றும் 4 X 100 மீட்டர் Relay race-யில் நம் கல்லூரி அணி 4-ஆம் இடமும் பெற்று நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

2025-2026ஆம் கல்வியாண்டின் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் நமது கல்லூரியின் மாணவ, மாணவியர்கள் தடகளம், கபடி, இறகுபந்து, கால்பந்து, சிலம்பம் ஆகிய போட்டிகளில் பங்கு பெற்றனர். இதில் கால்பந்து போட்டியில் நமது கல்லூரியின் வணிகவியல் துறை மூன்றாமாண்டு மாணவன் சஜீவன் மற்றும் தமிழ்த்துறை மூன்றாமாண்டு மாணவன் சைலந்தர் ஆகியோர் மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்டு மாநில அளவிலான போட்டியில் பங்குபெற்று அதற்கான சான்றிதழ் பெற்றுள்ளனர்.

**கல்லூரி நூலகம்**

கல்லூரி நூலகம் மற்றும் தமிழ் இந்து செய்தி தாள் இணைந்து மாணவர்களுக்கான வாசிப்பு பயிற்சி பட்டறை நிகழ்வினை 06.02.2026 அன்று முதல்வர் முனைவர் வீ.இரவி அவர்கள் தலைமையில் இந்து குழுமத்தின் மூத்த நிர்வாகி திரு. G.சதீஷ்குமார் அவர்கள் செய்தித்தாள் வாசிப்பு ஏன் முக்கியம் என்ற தலைப்பில் மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார்.

**நாட்டு நலப்பணித்திட்டம்**

ஜுன் 21-அன்று சர்வதேச யோகா தினமானது நாட்டு நலப்பணித்திட்டத்தின் மூலமாக நமது கல்லூரியில் கொண்டாப்பட்டது. கல்லூரியின் கணிதத்துறை விரிவுரையாளர் முனைவர் பா.இராஜா அவர்கள் மாணவர்களுக்கு யோகா தொடர்பான

பயிற்சிகளை அளித்தார்.

ஜுன் 25-அன்று போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியானது நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் வீ.இரவி அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஜுலை 16-அன்று நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் இணைந்து மாபெரும் இரத்ததான முகாம் நடத்தியது. இதில் கல்லூரி சார்பில் 108 யூனிட்கள் குருதிதானமாக அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தருமபுரிக்கு வழங்கப்பட்டது.

ஜுலை 26 அன்று நமது கல்லூரி மற்றும் தருமபுரி மாவட்ட மேரா யுவா பாரத் இணைந்து கார்கில் விஜய் திவாஸ் 2025 எனும் தலைப்பில் பேச்சுப்போட்டியினை நாட்டு நலப்பணித்திட்டமானது சிறப்பாக நடத்தியது.

தமிழ்நாடு நாட்டு நலப்பணித்திட்டத்தின் மூலமாக நடத்தப்படும் மாநில அளவிலான பயிற்சி பட்டறையான " Youth for Reviving Traditional Sports and Games" எனும் தலைப்பில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 08.08.2025 முதல் 10.08.2025 வரை நடைபெற்றது. இதில் பெரியார் பல்கலைக்கழகம் சார்பில் நமது கல்லூரியின் இரண்டாமாண்டு இளங்கலை தமிழ் மாணவன் L.சந்தோஷ் மற்றும் இரண்டாமாண்டு வணிகவியல் துறை மாணவி ப.பவ்யஸ்ரீ ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் 24.08.2025 முதல் 26.08.2025 வரை பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெற்ற மாநில அளவிலான "Youth for Social Justice" என்ற தலைப்பில் நடைபெற்ற பயிற்சி பட்டறையில் பெரியார் பல்கலைக்கழகம் சார்பில் நமது கல்லூரியின் இரண்டாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி V. கோபிகா அவர்கள் கலந்துகொண்டார்.

செப்டம்பர் 09 - அன்று போதைப்பொருட்களின் சமூக தாக்கம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வானது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு நாட்டு நலப்பணித்திட்டத்தின் மூலமாக போதைப்பொருள் தடுப்பு குழுவோடு இணைந்து நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் முதல்வர் அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

செப்டம்பர் 25-அன்று பாப்பிரெட்டிப்பட்டியில் உள்ள கனரக ஓட்டுநர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பேருந்து நிலையப் பகுதிகளில் கடை வைத்திருப்போர்களுக்கு சாலை பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அக்டோபர் 15-அன்று நாட்டு நலப்பணித்திட்டத்தின் மூலம் "Youth Awakening Day" சிறப்பாக கொண்டாடப்பட்டது.

டிசம்பர் 1 - அன்று நாட்டு நலப்பணித்திட்டத்தின் மூலமாக காவல் உதவி செயலியை பயன்படுத்துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

டிசம்பர் 15 - அன்று போதைப்பொருள் பயன்படுத்துதலுக்கு எதிரான முழக்கங்கள் எழுதுதல் போட்டியானது நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்புக் குழுவோடு இணைந்து நடத்தியது.

29-வது தேசிய இளைஞர் திருவிழா 2026 இன் மாநில அளவிலான கவிதைப் போட்டியானது 23.12.2025 அன்று சென்னை அடையாறில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் முதுநிலை தமிழ்த்துறை முதலாமாண்டு மாணவி சே.மோனிஷா அவர்கள் கலந்துகொண்டார்.

ஜனவரி 08 அன்று கல்லூரி முதல்வர் அவர்களின் தலைமையில் புதிய வாக்காளர் பெயர் சேர்த்தலுக்கான விழிப்புணர்வு நிகழ்வானது நடைபெற்றது. இதில் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் சின்னா அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

ஜனவரி 13 - அன்று பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்துடன் இணைந்து சாலைப்பாதுகாப்பு தொடர்பான மோட்டார் சைக்கிள் பேரணியானது நமது கல்லூரியில் நடைபெற்றது. முன்னதாக முதல்வர் அவர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்(பொ) திருமதி.இலட்சுமி அவர்களால் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஜனவரி 21 - அன்று நாட்டு நலப்பணித்திட்டத்தின் மூலமாக மன அழுத்தம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வானது கல்லூரியின் போதைப்பொருள் தடுப்பு குழுவோடு இணைந்து நடத்தியது. முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தருமபுரி மாவட்ட மனநல மருத்துவர் R.கற்பகம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

பிப்ரவரி 11 அன்று ஊடக அடிமைத்தனத்திற்கு எதிரிரான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி பட்டறையானது நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

29-வது தேசிய இளைஞர் திருவிழாவை முன்னிட்டு அரூர், அன்னை கல்வி நிறுவனங்களின் மூலம் நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான தேசிய இளைஞர் திருவிழா போட்டிகளில் நமது கல்லூரி கலந்துகொண்டு கவிதைப் போட்யில் முதுகலை தமிழ்த்துறை மாணவி சே.மோனிஷா மாவட்ட அளவில் முதலிடம் பெற்றார். பேச்சுப்போட்டியில் இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவி சி.சீதா இரண்டாமிடமும், குழு நடனத்தில் தமிழ்த்துறை மாணவர்கள் மூன்றாமிடமும் பெற்றார்.

நாட்டு நலப்பணித்திட்டத்தின் மண்டல இயக்குநரகத்தின் மூலம் 05.02.2026 முதல் 11.02.2026 வரை சங்ககிரி, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (பெண்கள்)-இல் தேசிய அளவிலான தேசிய ஒருமைப்பாட்டு முகாம் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் இளநிலை கணினி அறிவியல் இரண்டாமாண்டு மாணவர் M.ரவிவர்மா பெரியார் பல்கலைக்கழகத்தின் சார்பில் கலந்துகொண்டார்.

**இளைஞர் செஞ்சிலுவை சங்கம்** (YRC)

நமது கல்லூரியில் 16.07.2025 அன்று நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் இணைந்து மாபெரும் இரத்ததானமுகாம் நடத்தியது இதில் 108 மாணவ, மாணவியர், பேராசிரியர்கள் இரத்ததானம் வழங்கினர்.

10.02.2025 அன்று நாட்டு நலப்பணி திட்டம், இளைஞர் செஞ்சிலுவை சங்கம், இணைந்து மாபெரும் இரத்ததானமுகாம் நடத்தியது. இதில் 108 மாணவ - மாணவியர், பேராசிரியர்கள் இரத்ததானம் வழங்கினர்.

**செஞ்சுருள் சங்கம்** (RRC)

தருமபுரி மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகு 12.08.2025 அன்று நடத்திய இணைய வழியிலான வினாடி வினா போட்டியில் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

**நுண்கலை மன்றம்**

21.09.2025 அன்று தகடூர் புத்தகப் பேரவை நடத்திய நூல் அறிமுகத்தில் தமிழாய்வுத் துறை மாணவிகள் மா.ஆர்த்தி, ஆ.ஶ்ரீபத்மாவதி, சே.மோனிஷா, சி.சீதா ஆகியோர் பங்கேற்று நூல் அறிமுகம் செய்தனர்.

05.10.2025 அன்று தகடூர் புத்தகப் பேரவை நடத்திய போட்டிகளில் அபித்ரா, III B.Sc., Maths ஜோதிலட்சுமி, வெங்கடேஷ் II B.Sc SC., பவ்யா ஶ்ரீ II B.Com., சிவரஞ்சனி I B.A Sociology ஆகியோர் பங்கு பெற்றனர். அதில் ஜோதிலட்சுமி கட்டுரைப் போட்டியில் இரண்டாமிடம் பெற்று புத்தகங்களைப் பரிசாகப் பெற்றனர்.

19.01.2026 அன்று தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான வள்ளலார் மாநாடு போட்டியில் கி.ஜெயபிரகாஷ் III B.Sc., CS பு.அபித்ரா, III B.Sc., Maths ஆகியோர் பங்கு பெற்றனர். அதில் மாணவி பு.அபித்ரா கட்டுரைப் போட்டியில் மாவட்ட அளவில் இரண்டாமிடம் பெற்றார்.

12.02.2026 அன்று நம் கல்லூரியில் நடைபெற்ற கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் 1976- போட்டிகள் நடத்தப்பட்டன அதில் விவாதப் போட்டியில் வெ.கனிஷ்கர், I MA English முதல் பரிசும், சி.சீதா, II BA Tamil இரண்டாம் பரிசும் வென்றனர், கருத்தரங்க போட்டியில் வெ.கனிஷ்கர், I MA English முதல் பரிசும்,

கி.ஜெயபிரகாஷ், III BSc CS இரண்டாம் பரிசும் வென்றனர்.

13.02.2026 அன்று நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பா.ராகவி III BA Tamil முதல் பரிசும் சே.மோனிஷா II MA Tamil இரண்டாம் பரிசும் பெற்றார்.

05.03.2026 அன்று மகளிர் தின விழா போட்டிகளாக குழு நடனம், யாரென்று தெரிகிறதா, வார்த்தை விளையாட்டு, சைகை விளையாட்டு, கைவினைப் போட்டி, ஓவியப் போட்டி, நிகழ்விடப் போட்டி (on the spot games) ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 06.03.2026 அன்று மகளிர் தின விழாவில் பரிசளிக்கப்பட்டது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றம்** (ECO CLUB)

நமது கல்லூரியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றத்தின் சார்பாக 50 மரக்கன்றுகள் நடத்தப்பட்டுள்ளது. அம்மரக்கன்றுகள் செழித்து வளர்வதற்கான களப்பணியை 28.02.2026 அன்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்ற மாணவர்கள் மேற்கொண்டனர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றத்தின் சார்பாக மாணவர்களிடையே சுற்றுச்சுழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 05.03.2026 அன்று பசுமை உலகை படைப்போம். சுற்றுச்சுழலை பாதுகாப்பது நமது கடமை எனும் தலைப்புகளில் கட்டுரைப் போட்டி பேச்சுப்போட்டி நடைபெற்றது. கட்டுரைப் போட்டியில் கணிதவியல் மாணவி பி.அபித்ரா முதலிடமும், சமூகவியல் மாணவி இரா. ஸ்ரீமதி இரண்டாவது இடமும் பெற்றனர். பேச்சுப் போட்டியில் தமிழ் மாணவி சி.சீதா முதலிடமும், முதுகலை ஆங்கிலம் வெ.கனிஷ்கர் இரண்டாம் இடமும் பெற்றனர்.

**போதைப்பொருள் தடுப்புக்குழு**

போதைப்பொருள் தடுப்புக்குழு (ADC) சார்பாக மாணாக்கர்களிடையே போதைப்பொருட்கள் பயன்பாட்டினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்குகள், விழிப்புணர்வு முழக்கங்கள், ஓவியங்கள், கட்டுரை வரைதல், கவிதை எழுதுதல், பேச்சுப்போட்டி, வினாடி-வினா, குறும்படங்கள் மற்றும் சுவரொட்டிகள் தயாரித்தல் போன்ற நிகழ்வுகள் இக்குழுவின் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

இக்குழுவின் மூலமாக விழிப்புணர்வு பதாகைகள் ஏந்திய பேரணி, துண்டு பிரசுரங்கள் விநியோகம், நடை பயண பேரணி, பேருந்து நிலையம், ஆட்டோ நிலையம் மற்றும் தெருக்களில் பொதுமக்களிடையேயும், வாகன ஓட்டிகளிடையேயும் போதைப்பொருட்கள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு மாணாக்கர்களால் ஏற்படுத்தப்பட்டது.

மேலும், கல்லூரியின் அருகில் உள்ள கடைகளில் சட்ட விரோதமாக போதைப்பொருட்கள் விற்கப்படுகிறதா என வாரந்தோறும் இக்குழு சார்பாக

கண்காணிக்கப்படுகிறது. இக்கல்லூரியில் உள்ள அனைத்து மாணாக்கர்கள், ஆசிரியர்கள் (ம) ஊழியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு போதையில்லா தமிழ்நாடு மொபைல் செயலியை பதிவிறக்கம் செய்து போதையில்லா தமிழ்நாடு உருவாக்குவதே முக்கிய நோக்கமாக முழுமூச்சாக பணியாற்றுகின்றனர்.

## தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்

தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் சார்பாக 13.03.2026 அன்று நீங்களும் ஒரு தொழிலதிபர் ஆகலாம் என்ற தலைப்பில் மாணவ மாணவியர்களுக்கு பயிற்சி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திரு ஈசன் கார்த்திக் ENTREPRENEUR AND WEDDING ARCHITECT UNIQUE DECORS SALEM அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கான தொழில் முனைவோர் வாய்ப்புகள் பற்றி சிறப்புரை ஆற்றினார் மேலும் இதில் அனைத்து துறை சார்ந்த மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியை தொழில் முனைவோர் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் கோ.ஐயப்பன் அவர்கள் ஒருங்கிணைத்தார்.

## தேர்தல் கல்வியறிவு குழு

ஆகஸ்ட் 20 அன்று கல்லூரியின் தேர்தல் கல்வியறிவு குழுவின் மூலமாக கல்லூரியில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு புதிய வாக்காளர் சேர்க்கை தொடர்பான விழிப்புணர்வும், படிவங்கள் குறித்த விளக்கங்களும் அளிக்கப்பட்டது. இதில் பாப்பிரெட்டிப்பட்டி தேர்தல் துணை வட்டாட்சியர் சுதேஸ்வரி மற்றும் முதுநிலை வருவாய் ஆய்வாளர் கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

வாக்காளர்களுக்கான முறையான கல்வி மற்றும் தேர்தலில் பங்கேற்பு (SVEEP) நிகழ்வின் ஒரு பகுதியாக கட்டுரைப்போட்டி மற்றும் ஓவியப்போட்டிகள் 21.08.2025 அன்று நடத்தப்பட்டது. கட்டுரைப்போட்டியில் சி.சீதா தமிழ் மாணவி முதலிடம், சி.யாழ்மொழி கணித மாணவி இரண்டாமிடமும், ச.சௌந்தர்யா இயற்பியல் மாணவி மூன்றாமிடமும் பெற்றனர். ஓவியப்போட்டியில் மாணவிகள் கி.பிரீத்தா முதலிடமும், ம.இசைமொழி இரண்டாமிடமும், சி.ஹரிதாதமிழஞ்சனி மூன்றாமிடமும் பெற்றனர்.

ஜனவரி 08 அன்று கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களில் இளம் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், முகவரி மாற்றம், நீக்கம் குறித்த விழிப்புணர்வு பாப்பிரெட்டிப்பட்டி வாட்டாட்சியர் அலுவலகம் மூலம் ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் வட்டாட்சியல் சின்னா அவர்கள், கலந்து கொண்டு விளக்கினார்.

பிப்ரவரி 02 அன்று பாப்பிரெட்டிப்பட்டி தேர்தல் அலுவலகத்தின் மூலமாக நாட்டு

நலப்பணித்திட்ட மாணவர்களுக்கு EVM மெஷின் பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்வானது நடத்தப்பட்டது. இதில் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளரான கார்த்திக் அவர்கள், அவர்களின் குழுவினரோடு வருகைபுரிந்து செய்முறையை விளக்கினார்கள்.

## தமிழ்ப் புதல்வன் மற்றும் புதுமைப்பெண்

நமது கல்லூரியில் தமிழ்நாடு அரசு உயர் கல்வி பயிலும் அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தி வருகிறது. அதன் அடிப்படையில் தமிழ் புதல்வன் திட்டத்தில் 267 மாணவர்களும் புதுமைப்பெண் திட்டத்தில் 297 மாணவிகளும் மாதம் 1000 பெற்று ஆண்டிற்கு 5,64,000 ரூபாயை உதவித்தொகையாகப் பெற்று வருகின்றனர்.

## கலைத் திருவிழா

தமிழ்நாடு அரசு கல்லூரி மாணவர்களிடையே பண்பாட்டு கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் விதமாக ரூபாய் 2 லட்சம் ஒதுக்கீடு செய்து 32 போட்டிகளை மாணவர்களிடையே நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இவ்விழாவின் நிறைவு நாளில் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் நிர்வாக குழு உறுப்பினர் பேரா இரா. சுப்பிரமணி மற்றும் தூய நெஞ்சக் கல்லூரி பேராசிரியர் நாடகவியலாளர் முனைவர் கி.பார்த்திபராஜா ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். திருவிழாவினை தமிழ் உதவிப் பேராசிரியர் சமூகவியல் துறைத்தலைவர் (பொறுப்பு) முனைவர் பொ.செந்தில் குமார் அவர்கள் ஒருங்கிணைத்தார்.

## திருக்குறள் கருத்தரங்கம்

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை நிறுவி அதன் வெள்ளி விழாவினை முன்னிட்டு கல்லூரிகள் தோறும் திருக்குறள் போட்டிகள் கருத்தரங்கங்கள் நடைபெற்றது. நம் கல்லூரியிலும் திருக்குறள் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. திருக்குறள் கருத்தரங்கம் தமிழக அளவில் மூன்று நாட்கள் நடத்திய ஒரே கல்லூரி நம் கல்லூரி என்பது சிறப்புக்குரியது. இவ்விழாவின் நிறைவாக தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக பேராசிரியர் இரா. குறிஞ்சிவேந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## கல்வி உதவித்தொகை

நமது கல்லூரியில் 2025 - 2026 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு அரசின் மிகவும் பிற்படுத்தப்பட்ட பழங்குடியின மாணவ மாணவியருக்கு கல்வி உதவித்தொகை சுமார் 4 லட்சம் ரூபாய் 665 மாணவ மாணவியர்கள் பெற்றனர் மேலும் இவ்உதவித்தொகை பெறுவதற்கு முழு முயற்சி எடுத்த நம் உதவியாளர் V.ஜெயராணி

மற்றும் கணிதத்துறை உதவிப்பேராசிரியர் இரா.ஜெயராமன் அகிய இருவரின் முயற்சியும் பாராட்டக்குரியது.

**கல்லூரி வேலைவாய்ப்பு மையம்**

EAST WEST PHARMA, SALEM நிறுவனத்தில் மாணவர்கள் J.ஜெயபிரகாஷ், G.கிரிதரன், M.கௌதம், J.ஜெயகிருஷ்ணன், M.ரவிவர்மன் ஆகியோர் NEXT GEN திட்டத்தின் கிழ் இரண்டாம் சுற்று பயிற்சி வகுப்புகளை வெற்றிகரமாக முடித்து தற்போது நிறுவனத்தின் பகுதி நேர ஊழியர்களாக பணியாற்றி வருகின்றனர்.

கல்லூரி வேலைவாய்ப்பு மையம் மற்றும் வரண்டா ரேஸ் சேலம் பயிற்சி நிறுவனம் இணைந்து போட்டித் தேர்வுகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வினை நடத்தினர்.

23.01.2026 அன்று TNPSC, SSC, IBPS தேர்வுகளுக்கான அட்டவணை 2026 ஓர் பார்வை என்ற தலைப்பில் ரேஸ் மையத்தின் முதன்மை பயிற்சியாளர் பி.ஸ்ரீ பிரசாத் குமார் அவர்கள் மாணவர்களிடையே சிறப்புரை நிகழ்த்தினார்.

09.02.2026 இன்று INDICS SOLUTIONS, CHENGALPATTU நிறுவனத்தின் சார்பில் நமது கல்லூரியில் வேலைவாய்ப்புக்கான நேர்காணல் நடைபெற்றது. ஏறத்தாழ 100க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கு பெற்று 70 மாணவ மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மாதம் ரூ.18,000 ஊதியத்தில் பணி ஊதியத்தில் பணி ஆணைகள் பெற்று உள்ளனர்.

கிருஷ்ணகிரி கேட்டர்பில்லர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் அன்று நம் கல்லூரியில் நடத்திய வேலைவாய்ப்பு முகாமில் 89 மாணவ மாணவியர் நேர்காணலில் பங்குபெற்று 75 மாணவ மாணவியர் பணி ஆணையினை பெற்று உள்ளனர்.

கல்லூரி வேலைவாய்ப்பு மையம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் இணைந்து 13.03.2026 அன்று "நீங்களும் ஒரு தொழிலதிபராகலாம்" என்கின்ற மாணவர் பயிற்சி பட்டறை நடத்தினர். UNISUE DECORS, SALEM நிறுவனர் திரு. ஈசன் கார்த்திக் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவர்களுக்கான தொழில் முனைவோர் வாய்ப்புகள் என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

16.03.2026 அன்று பெரியார் பல்கலைக்கழகத்தில் TVS குழுமத்தின் UNOMINDA HOSUR நிறுவனம் நடத்திய வேலைவாய்ப்பு நேர்காணலில் நமது கல்லூரி மாணவர்கள் C.லித்திகா, K.நந்தகுமார், M.பர்சானா, S.அருள்பிரியா, K.சந்துரு ஆகியோர் வெற்றி பெற்று தங்களது பணிக்கான ஆணையினை பெற்றுக் கொண்டனர்.

## சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மன்றம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி மாணவர்களிடமும் பொதுமக்களிடமும் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 22.12.2025 அன்று சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மன்றம் தொடங்கப்பட்டது. இந்த மன்றத்தின் மூலம் பல்வேறு நிகழ்ச்சிறகள் நடத்தப்பட்டு மாணவர்களிடையே சாலை பாதுகாப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

07.09.2025 அன்று சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் பேரணி நடத்தப்பட்டது. இந்த பேரணி கல்லூரி வளாகத்திலிருந்து தொடங்கி பாப்பிரெட்டிப்பட்டி முக்கிய வீதிகள் வழியாக நடைபெற்றது. இதில் மாணவர்கள் சாலை பாதுகாப்பு குறித்த பதாகைகள் மற்றும் கோஷங்களை எழுப்பி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

31.12.2025 அன்று பாப்பிரெட்டிப்பட்டி பேருந்து நிலையத்தில் மாணவர்களால் சாலை பாதுகாப்பு குறித்து தெரு நாடகம் (Street Play) நடத்தப்பட்டது. இந்த தெரு நாடகம் பொருமக்களின் கவனத்தை ஈர்த்தது. ஹெல்மெட் அணிவதின் அவசியம், விதிமுறைகளை கடைப்பிடித்து வாகனம் ஓட்டுதல் போன்ற முக்கியமான கருத்துகளை மக்களிடம் கொண்டு சென்றது.

19.11.2025 அன்று, சென்னை இணை போக்குவரத்து ஆணையர் அவர்கள் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த நிதி ரூபாய் 12,000/- வழங்கியதை ஒட்டி, 03.02.2026 அன்று கல்லூரியில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, நாடகப் போட்டி, ஓவியப்போட்டி மற்றும் கருத்தரங்கம் ஆகியவை மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. இதில் பல மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். போட்டிகளில் முதல் மூன்ற இடங்களை பிடித்த மாணவர்களுக்கு பரிசுத்தொகை 7,500/- வழங்கப்பட்டன.

04.02.2026 அன்று பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர், மா.பாரதி மோகன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சாலைப் பாதுகாப்பின் அவசியம் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறப்பு உரையாற்றினார். தனது உரையில் ஹெல்மெட் மற்றும் சீட் பெல்ட் அணிவதின் முக்கியத்துவம், போக்குவரத்து விதிகளை பின்பற்றுவதின் அவசியம் ஆகியவற்றை வலியுறுத்தினார்.

05.02.2026 அன்று தர்மபுரி அரசு கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான போட்டிகளில் நம் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் இளநிலை கணிதத்துறை மூன்றாம் ஆண்டு மாணவி பு.அபித்ரா அவர்கள் கட்டுரை

போட்டியில் முதல் இடம் பெற்று நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்.

27.02.2026 அன்று சென்னை போக்குவரத்து ஆணையர் அவர்கள், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை நவீன முறையில் மாணவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பரப்பும் நோக்கில் ரூபாய் 20,000/- நிதியை ஒதுக்கியதை முன்னிட்டு 16.03.2026 அன்று Reels மற்றும் குறும்படம் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் மாணவர்கள் சாலைப் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு சிந்தனைமிக்க காணொளிகளை உருவாக்கி வழங்கினர். சிறந்த முறையில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்குப் பரிசுத்தொகை ரூபாய். 20,000/- வழங்கி பாராட்டப்பட்டது.

இந்த வகையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மன்றம் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாக மாணவர்களிடமும் பொதுமக்களுக்கும் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

# தமிழ்த்துறை









# ஆங்கிலத்துறை





# வணிகவியல் துறை





# சமூகவியல் துறை






## கணிதவியல் துறை





## கணினிஅறிவியல் துறை









# இயற்பியல் துறை






# பொங்கல் விழா








# உடற்கல்வித் துறை














Pappireddipatti, Tamil Nadu, India
96e, Pappireddipatti, Tamil Nadu 636905, India
Lat 11.906224° Long 78.362952°
Thursday, 12/02/2026 12:34 PM GMT +05:30
Google

Pappireddipatti, Tamil Nadu, India
96e, Pappireddipatti, Tamil Nadu 636905, India
Lat 11.906227° Long 78.36295°
Thursday, 12/02/2026 12:34 PM GMT +05:30
Google

# நூலகம்





# நாட்டு நலப்பணித்திட்டம்










## போதைப் பொருட்கள் விழிப்புணர்வு









## சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு










# திருக்குறள் கருத்தரங்கம்

















## அமைதி (போர்) களம்

வான வேடிக்கை என்று தானே
எங்கள் குழந்தைகள் கை அசைத்தனர்,
அந்த சிரிப்பின் மீது தானே
நீங்கள் குண்டு மழை பொழிந்தனர்....

தாயின் பாசம் இழந்தனர்,
தந்தையின் பாதுகாப்பை இழந்தனர்,
நீங்கள் அழித்த இடத்தில் தானே
மீண்டும் விளையாடினர்,
சிரிக்கவே மறந்தனர்

வானத்தை பார்க்கவில்லை மீண்டும்
மழை வந்தாலும் இன்று,
ஆனால் பசி பார்க்க வைக்கிறது
தாய் வருவாளா என்று.

உணவு இல்லை
உடைமை இல்லை
உறவென்று யாருமில்லை
உயிர் மட்டும் இருக்கிறது.
மீண்டு வாழ்வோம் என்று
மீண்டும் வாழ்வோம் என்று...
நம்பிக்கையுடன் ?

வேண்டாம் இந்த போர் !
வேண்டாம் இந்த போர் !

**சு.சையத் மன்சூர்**
கௌரவ விரிவுரையாளர்,
ஆங்கிலத்துறை.

## என்ன பயன் ?

உடலங்கத்திலிருந்து பிறந்ததோ சாதி -
உயிரெங்கே பிறந்தது? அதுவென்ன சாதி ?
சாக்கடையின் நாற்றத்தில் வாழ்ந்து விடலாம்...
சாதியின் நாட்டத்தில் வாழ்ந்தென்ன பயன்?

மழை நீர் இன்ன மதமென்று கேட்டு மண்ணே கலப்பதில்லை...
மரம், செடி, கொடி எச்சாதி மண்ணென்று கேட்டு வளர்வதில்லை...
பொய், புரட்டு, வஞ்சம், கொலை, போதை,
இவை யாவும் குற்றமில்லை...
பொல்லாத உலகில் தீண்டாமையை ஒழிக்காமலில்லை
இவைகளை ஒழித்தென்ன பயன்?

குடிநீரில் மலம் கலக்கும் கோமான்கள் இருக்கும் நாட்டில் - கோபுரக்
கலசம் தன்னில் குடம் குடமாய் நீருற்றி
குவலயம் செழித்தோங்க வேண்டுதல் வைத்தென்ன பயன்?

காதல், மனதையும், நேசத்தை மட்டும பார்க்கும் - சாதியையும்
மதத்தையுமா பார்க்கும்?
கத்தியும், அரிவாளும் குளித்துக்குதுகலிக்கவா இத்தனை
காதலித்தென்ன பயன்?

ஆண்டான், அடிமை என்ற எண்ணம் இன்றும்
ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது -
ஆஹா.... சுதந்திரம் கிடைத்ததென்று
ஆர்ப்பரித்தென்ன பயன் ?
சாதியையும், மதத்தையும் ஒழிக்காமல்
சந்திரனுக்கு செயற்கைக்கோள் விட்டென்ன பயன்?
பாமரனின், பாட்டாளியின் பசிப்பிணி போக்காது -
பாரதமே நீ பாரெல்லாம் புகழ் பெற்றென்ன பயன் ?

தீண்டாமை எனும் தீயை அழித்தொழிக்காமல்
கோடான கோடி தீபங்கள்
ஏற்றி என்ன பயன் ?

மதத்தினை தூக்கிப் பிடித்துக் கொண்டு,
மனிதத்தை இழந்து,
மனிதனாய் இம்மண்ணில் வாழ்ந்தென்ன பயன் ??

**த.கோகுலகண்ணன்,**
கௌரவ விரிவுரையாளர், ஆங்கிலத்துறை.

## மனம் சொல்லும் மொழி

சூழ்நிலை எதுவாக இருந்தால் என்ன?
ஒருவருடன் நாம்
பழகிய முதல்நாள் கொடுக்கும்,
அதே முக்கியத்துவத்தை,
இறுதி வரை கொடுங்கள்...
இல்லை எனில்....
சிறிது விலகி நிற்பது
ஒன்றும் பிழையில்லை...
ஏனெனில்
தேவைக்கேற்ப மாறும் " மனம் "
உங்களிடம் இருக்கலாம்....
அதனை ஏற்றுக்கொள்ளும் "மனம்"
எல்லோரிடத்திலும் இருப்பதில்லை
என்பதே நிதர்சனம்...

முனைவர். **கோ.புவனேஸ்வரி,**
கௌரவ விரிவுரையாளர்,
முதுகலைத் தமிழாய்வுத்துறை.

## வினாவாக நான்

கடவுள் நேரில் வருவாரா?
கருணை மழைப் பொழிவாரா?
கல்வியைத் தாரை வார்த்த
என் தாயை
மீண்டும் தரணியில் காண்பேனா............?
எதை எதையோ இழந்து கற்றேன்
கல்வியை மட்டுமல்ல ; வாழ்க்கையையும்
கொஞ்சம் கொஞ்சமாய் இழந்ததைப் பெற்றேன்
கல்விக்காக இழந்தத் தாயைப் பெற்றேனா?
அவளுக்கு நிகர் அவள் தானே...?
இன்றும் வினாவாக மட்டுமே தொடர்கிறது
என் வாழ்க்கை......

முனைவர் **பொ.கலைவாணி**
கௌரவ விரிவுரையாளர், முதுகலைத் தமிழாய்வுத்துறை

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டு போல,
முதல் படிநிலையை வென்றது போலவே
அடுத்த படிநிலையும் எளிமையாக இருப்பதில்லை,
நாம் அடுத்தடுத்த படிநிலையை வெல்ல,
ஒவ்வொரு நாளும் நம் நாம்
செதுக்கிக்கொண்டே இருக்க வேண்டும்
நிச்சயம் ஒரு நாள்
அனைத்து படிநிலைகளையும் வென்றுவிடலாம்...

****

கண்ணீர் சிந்துகிறது மேகம்,
சூரியனின் வெப்பத்திலிருந்து
பூமித்தாயை காக்க...

****

என் மனதின் சிந்தனைகளுக்கு
உயிர் கொடுத்து விட்டு
தன் உயிரை விட்டது ;
மை தீர்ந்தவுடன் பேனா...

****

கால வெள்ளத்தில் கடந்தும் கரைந்தும்
போனது என் கவலைகள் ;
பாவம், இன்னும் கவலைகளை
சுமந்து கொண்டு தான் இருக்கின்றன

****

நான் பட்டம் பெற எத்தனை
எத்தனையோ
எழுதுகோல்களும், காகிதங்களும்
தியாகம் செய்தன
பட்டமோ ! ஒரே காகிதத்தில்
சில வரிகள்....

**அ.ராஜ்குமார்,**
தட்டச்சர்.

## தமிழ் மொழி

கல்தோன்றி மண்

தோன்றாக் காலத்தே

முன் தோன்றி மூத்த மொழி !

அன்னை தந்த முதல் மொழி என்

அறிவைத் திறந்த அறிவு மொழி

சிந்து வெளியில் சிரித்தவள் நீ...

சங்க இலக்கியத்தில்

நிலைத்தவள் நீ

காலத்தைக் கடந்து

ஆள்பவள் நீ

என்னைத் தாலாட்டிய மொழி !

என் தருமைத் தாய் மொழி !

எண்ணமொல்லாம் நிறைந்தமொழி !

இதயத்தின் வலி மறக்க

உதவும் மருந்தாய்

இனிய என் தாய் மொழி

என்றும் என்னுடனே

காலங்கள் மாறலாம் உன்

கோலங்கள் மாறாது.

கண்டங்கள் மாறாது

அழியாது அழிவற்ற பெரும் செல்வமே

என் அழியாத அமுதத்தமிழே வாழ்க !

**ச.தினேஷ்**

II - B.Sc.,இயற்பியல்

## சங்கம் வளர்த்த தமிழ்

செம்மொழியாம் தமிழ்மொழி

அதுவே என் தாய்மொழி...

தொன்மைக்கு அகத்தியம்

இலக்கணத்திற்கு தொல்காப்பியம்

புகழ்ச்சிக்கு புறநானூறு

ஐவகை நிலங்களை

விளக்கும் குறுந்தொகை...

என்ன இல்லை

எம் தாய்மொழியில்...

எல்லையற்ற மொழி இது...

எல்லாவற்றையும்

எடுத்தியம்பும் மொழி இது...

தமிழ்ச்சொல் ஒன்றே போதுமே !!

தரணியில்

என்றும் நம்மை உயர்த்துமே !!!

காற்றின் கீதத்தையும்

கவிதையின் சொரூபத்தையும்

தன்னகத்தே கொண்டு

தரணியில் பெருமை சொல்லும்

ஒரு வீர மொழி

தமிழ் தாய்மொழி...!!!

**பொ.மஞ்சுளா**

இளநிலை முதலாமாண்டு

கணினி அறிவியல் துறை

## அம்மா

இறைக்கே இணையாகி வானிற்கு நிகராகி
பேரன்பிற்கு இலக்கணமானவள் இவள்
ஈர ஐந்திங்கள் வலி தாங்கி
மறுபிறவி கையில் ஏந்தி ஓர்
உயிரை ஈன்றெடுக்கும் சுமை தாங்கி இவள்
பெற்ற பிள்ளைக்குப் பெயர்ச்சூட்டி
தாலாட்டி சோறூட்டி முடிசூட்டப் போராடும்
மணிமகுடம் அணியா அரசி அவள்...
ஆம் அவள் தான் நம் அன்னை

**மா.சுகமாதேஸ்வரி,**
முதுநிலை கணிதவியல் முதலாமாண்டு,

## தாய்ப் பாசம்

தாய் என்பவள் மலராய் மலரும்,
குழந்தை அவளின் இதழாய் விளையும்
அவள் நிழலில் தான்
அவன் உலகம் விழிக்கும்

## குடும்பம்

தந்தையின் பாசம் வளர்க்கும் வேராய்
தாயின் பாசம் வழியனுப்பும் தேனாய்
அண்ணன் பாசம் ஆயுள்
முழுவதும் நிழலாய் நிற்கும்

## நட்பு

நட்பு என்பது ஓர் உறவு அல்ல,
உயிரின் இன்னொரு வடிவம்,
உயிரை எடுக்கும் வலிமையும் அவனே
உயிரை கொடுக்கும் வலிமையும் அவனே

**த.சிவரஞ்சனி**
முதலாமாண்டு சமுகவியல்.

## அம்மா....

அம்மா என்றால் அன்பின் கடல், அவள் இல்லாமல்
வாழ்வு வெறும் மடல், தாலாட்டு பாடி தூங்க வைத்தவள்,
தனது தூக்கத்தை தியாகம் செய்தவள்
நாம் சிரித்தால் உலகம் சிரிக்கும் என நினைப்பவள்
நாம் அழுதால் நெஞ்சம் உடைந்து போவாள்
சின்ன விரலில் பிடித்து நடக்க கற்றுத்தந்தாள்,
சிறந்த மனிதராக வாழ வழி காட்டினாள்
பசியென வந்தால் உணவு ஊட்டுவாள்,
பாதை தவறினால் நெறி காட்டுவாள்
தன் கனவுகளை மறந்து நம்மை உயர்த்தினாள்,
தம் வாழ்க்கையை முழுவதும் நமக்கே அர்ப்பணித்தாள்
அவள் அன்பு கடலின் ஆழம் போல,
அளவிட முடியாதது என்றும் குறையாது. அம்மா.....

**இரா.சஞ்ஜீகா**
இளநிலை இரண்டாமாண்டு
இயற்பியல் துறை

## அப்பா....

உலகத்தில் பல உறவுகள் இருக்கலாம்
ஆனால் நம்மை
மௌனமாக நேசிப்பவர் அப்பா...
தன் சோர்வை மறைத்து
நமக்காக சிரிப்பவர் அவர்...
தன் கனவுகளை மறந்து
நம் கனவுகளை நிறைவேற்றுபவர் அவர்
நாம் விழும் போது
தூக்கி நிறுத்தும் வலிமை அவர்...
நாம் வெற்றி பெறும் போது
மிகவும் மகிழும் இதயம் அவர்.
எத்தனை பெரியவராக ஆனாலும்
நமக்காக எப்போதும் நிழலாய் நிற்பவர் அப்பா.......

**சு.ஏஞ்சல்**
கணிதவியல் இரண்டாம் ஆண்டு

## வாழ்க்கை

உயரப் பறந்தாலும்
உலகம் தூற்றும்
நீ ஒடுங்கி நடந்தாலும்
உலகம் தூற்றும் ....
உன்னை நீ செதுக்கு...
உனக்கு உளியாய் நீயே இரு...
உன் வாழ்வை
உனக்காய் வாழ்ந்திடு.......

**து.நிதிஷ்**
முதலாமாண்டு கணினி அறிவியல்துறை.

## கூந்தலில்...

கார்மேகம் கவிழ்ந்ததா?
உன் கூந்தல் அவிழ்ந்ததா?
காற்றில் ஆடும் முகிலே!!!
வாசம் வீசும் கீற்றே!!!

பின்னலிட்ட பாதையில்
மனம் தடுமாறி விழுகிறேன்....
உன் கூந்தலில் குடியேறவே
காத்துக் கிடக்கிறேன் மலராய்!!!

**அ.ஸ்ரீபத்மாவதி**
முதுகலை தமிழ் இரண்டாம்மாண்டு

## பறவையின் வாழ்க்கை

பறவையின் வாழ்க்கை வேண்டுமென்று
மனிதன் ஆசை கொள்வதுண்டு!
பறவையின் வாழ்க்கை தெரியுமா?

அங்கு ஏழு தலைமுறைக்கு
சொத்து சேர்க்க யாருமில்லை!
உணவை பதுக்கி வைத்து
ஊட்டிவிட எவருமில்லை!

ஒரு பருக்கை ஆனாலும்
தானே தேடிக் கொள்ள வேண்டும்,
வசிக்கக்கூடு கூட
தானே கட்டிக்கொள்ளவேண்டும்,
சிறகு முளைக்கும் வரை தான்
தாய் பறவை அரவணைக்கும்!

மனித இனம் போல்....
சாகும் வரை ஏவல் செய்ய
ஆள் இல்லை!
செத்த பின்னும் திதி கொடுக்க
எவரும் இல்லை!!

**சி.திருவேங்கடம்**
முதுகலை கணினி அறிவியல் துறை

## அவள்

சிறகுகள் இல்லாமல் பறக்கும் அவள்,

சோர்வு இல்லாமல் போராடும் அவள்,

கனவுகளை நிஜமாக்கும் சக்தி அவள்,

உலகம் பெருமை கொள்ளும் பெண் அவள்,

அவள் என் வாழ்க்கையின் முதல் ஒளி,

அவள் என் மனத்தின் நம்பிக்கை,

அவள் சிரிப்பு என் சந்தோஷம்,

அவள் அன்பு என் உலகம்,

நான் விழுந்தால் தூக்கி நிறுத்தும் அவள்,

நான் அழுதால் ஆறுதல் தரும் அவள்,

என் வாழ்வின் முதல் தெய்வம் அவள்,

என்றும் என் அன்பான "அம்மா" அவள்,

**வ.கோபிகா,**
இரண்டாம் ஆண்டு ஆங்கிலத்துறை.

## என் தோழி....

வாழ்கைப் பாதையில்

தனியாக நடந்தபோது.....

என் கையைப் பிடித்து

நடக்க வந்தவள் தோழி...

சிரிக்க காரணம் இல்லாத நாளிலும்

என்னை சிரிக்க வைத்தவள்...

அழுகை மறைக்க நினைத்த

நேரத்திலும்

என் கண்ணீரை புரிந்தவள்....

சின்ன சண்டைகளில்

அன்பை மறைத்தாலும்...

அந்த சண்டைக்குள்ளே

நம் நட்பு இன்னும் வலுப்பட்டது....

உலகம் முழுவதும் என்னை விட்டாலும்

நான் விழுந்தால் தூக்கி நிறுத்த

எப்போதும் அருகில் இருப்பவள்

நண்பன் என்ற ஒரு வார்த்தை

சிறியது தான்...

ஆனால் அதில் அடங்கும் அன்பு

அளவிட முடியாதது...

**கா.காவியா**

இரண்டாம் இயற்பியல்துறை.

## அன்புத் தோழிக்கு....

என் வாழ்க்கைப் பாதையில்
என்னை சந்தித்த அழகான வரம் நீ...
சிரிக்கும் நேரத்தில்
சேர்ந்து சிரிக்கும் தோழி நீ...
வருந்தும் நேரத்தில்
ஆறுதல் தரும் நண்பி நீ...
மழை வரும் போது கேம் போல
என் மனதில் நிழல் தருபவள் நீ...
இருள் வரும் நேரத்தில்
ஒளியாக நிற்கும் நட்பு நீ...
எத்தனை பேர் வந்தாலும்
உன் நட்புக்கு ஈடு இல்லை...
என் வாழ்க்கையில்
என்றும் மறக்க முடியாத தோழி நீயே...
அன்பு என்ற வார்த்தைக்கு
அர்த்தம் சொன்னவள் நீ...
நட்பு என்ற பாதையில்
என்னுடன் நடந்தவள் நீ...
என் வாழ்க்கையில் அழகான தோழி நீயே....
சிரிக்க காரணம் தேவை இல்லை
என் பெண் தோழி இருந்தால் போதும்
நண்பி என்பது ஒரு வார்த்தை இல்லை
அது வாழ்க்கையை அழகாக்கும் ஓர் உறவு
நட்பு ஒரு வரம் என்றால்
அதில் கிடைத்த பொக்கிஷம் நீ...
என் வாழ்க்கையை அழகாக்கும்
அன்பு தோழி நீ...
நட்பு என்ற வார்த்தைக்கு
அர்த்தம் செல்லும் தோழியும் நீயே...
என் சிரிப்பின் பின்னால் இருக்கும்
அழகான காரணமும் நீயே...

**சி.லோகேஸ்வரன்**
இரண்டாம் இயற்பியல்துறை.

## பெண்மை

இங்கு மீசையில்லா
பாரதியும் உண்டு
மீசையுள்ள அன்னை
தெரசாவும் உண்டு
புரட்சி... ஆண்களால் மட்டுமே
செய்ய முடிந்தது அல்ல
அன்பு பெண்களால் மட்டுமே
தர முடிந்ததும் அல்ல...
ஆணுக்குள்ளும் பெண்மை உண்டு...
பெண்ணுக்குள்ளும் வீரம் உண்டு...

## புத்தகம்

புத்தகங்கள்
இல்லையென்றால்
சரித்திரம்
மௌனமாகிவிடும்
இலக்கியம்
ஊமையாகிப்போகும்
புத்தகம் என்பது மனித
கலமே அச்சு வடிவில் இருப்பது போல...

## பெண்கல்வி

முதலீட்டை தங்கத்தில் போடாமல்
பெண்களின் கல்வியில் போட்டால்
அடுத்த தலைமுறையே மாறும்...

**சு.அபிநயா**
இரண்டாம் இயற்பியல்துறை.

## இயற்கை

தினமும் எழும் சூரியனே...!
உன்னை யார் எழுப்புகிறார்?
துணையே இல்லாத நிலவே
யாருக்காக தினமும் காத்திருக்கிறாய்...
உனக்கு என்ன அவ்வளவு
சோகம், மழையாய் பொழிகிறாய்...
வானவில்லை...!
ஏழு வண்ணத்தில் யாருக்காகப் பாதை
அமைக்கிறாய்...!
சாரல் மழையில் நனைந்தக் காற்று
தென்றலாய்ச் சில்லிடுகிறது.
மழைநீர் கொட்டும் சத்தம்
புதியதொரு இசையமைக்கிறது.
மலர்களெல்லாம் நீரில் நனைந்து
தலையாட்டிப் புன்னகைக்கிறது.
எல்லார் மனதும்
மழையில் கொட்டும் சத்தம்
புதியதொரு இசையமைக்கிறது.
மலர்ளெல்லாம் நீரில் நனைந்து
தலையாட்டிப் புன்னகைக்கிறது
எல்லோர் மனதும்
மழையில் நனையவே
மன்றாடிக் கெஞ்சுகிறது.
பல மைல் தூரம் கடந்த வரும்
இந்த நீர்த்துளிகள்
தேவனின் தீர்த்தமாகவும் இருக்கலாம்!

**சு.சுரேகா**
இரண்டாம் கணிதவியல்துறை

## இயற்கை

மழை விழும் நேரத்தில்
மண் வாசம் மனதைத் தொட்டது.
காற்று மெதுவாக வீச
மரங்கள் இசைப் பாடின,
பறவைகள் வானத்தில பறந்து
சுதந்திரம் காட்டின
மலர்கள் மெதுவாக மலர்ந்து
பூமியை அழகாக்கின
ஆறு ஓடி சென்றது
மலைகளின் கதையை சொல்ல
சூரியன் மறையும் மாலை
வானம் சிவக்கும் ஓவியமாய் மாறியது.
அந்த அழகைப் பார்த்த மனம்
ஒரு கவிதை எழுதத் தொடங்கியது,
அந்த கவிதை இயற்கை

**பெ.கயல்விழி**
இரண்டாம் இயற்பியல்துறை.

## மலர்

மலரை இழந்தால் மீண்டும்
பெறலாம் ஆனால், உயிரை
இழந்தால் மீண்டும் பெறமுடியாது.
கவிதை என்பது மலரைப் போல
அழகான வரிகளை
சொல்வது அல்ல
ஆழமான வரிகளை
சொல்வது ஆகும்.
வாழ்வில் தோல்வி அதிகம்,
வெற்றி குறைவு,
என வருந்தாதே...
செடியில் இலைகள் அதிகம்
என்றாலும்,
அதில் பூக்கும் சில
மலருக்கே மதிப்பு அதிகம்.

**வே.சத்யா,**
இரண்டாம் கணிதவியல்துறை

## நட்பு

நட்பு என்ற வார்த்தை
இந்த உலகில் உலவும் வரை
இங்கு யாரும் அனாதை இல்லை...
நண்பன் தவறு செய்தால்
மன்னித்து விடாதே
மறந்து விடு.ஏனெனில்
அவர்கள் உன் உணர்வுகள்
உறவுகள் அல்ல...
ஆறுதல் சொல்ல தோழி இருந்தால்
அழுவதில் கூட சுகம் உண்டு...
மலரின் வாசம் அனைவரையும் கவரும்...
அதுபோல...
நம் நட்பின் சுவாசம்
அனைவரையும் கவரட்டும்....
எவ்வளவு அசிங்கமாக திட்டு வாங்கினாலும்
எதுவும் நடக்காத மாதிரி பேச
நண்பன் ஒருவனால் மட்டுமே முடியும்.
தோள் கொடுக்க தோழனும்
தோள் சாய தோழியும்
கிடைத்தால் அவர்கள் கூட
தாய், தந்தை, தான்....

**சி.காளி**
இரண்டாம் கணிதவியல்துறை.

## நட்பு

சொல்லாத வார்த்தைகளுக்குள்
புரிந்துணரும் அமைதிதான் நட்பு...
தொலைவில் இருந்தாலும்
தோளாக நின்று தாங்கும் உணர்வு...
நேரம் கேட்டுப் பார்க்காத
நேர்மையான பந்தம்...
வாழ்க்கை முழுக்க கூட இல்லாமல்
இருந்தாலும்
ஒரு நொடி வந்தாலும் மறக்க முடியாத நினைவு...
உலகம் முழுக்க இருட்டாயினாலும்
ஒளி போல நுழையும் ஒரே உறவு..,
கை பிடிக்காமல் கூட
மனசை பிடித்து நிற்கும் சக்தி - அதுதான்
நட்பு...

**தெ.திவ்யதர்ஷினி**
இரண்டாம் இயற்பியல்துறை

## இதயத்தின் நினைவோட்டம்

வரப்புகளாக
வலிகள் இருந்தாலும்,
நினைவாய் ஓர் நீரோடை!!!

இறக்கும் போது - ஒரு
இறுதி ஆசை
இன்னும் ஒரு முறை உன் மகளாய் நான் !!!

உடைந்து போன கனவு உண்மையானது!
ஏதோ ஓர் இரவில் வந்த
எதிர் பாராத வந்த கனவு!!!...

கலங்கிப்போன இதயம்!
தெளிவடைய சில காலம்!
இப்படிக்கு நம்பிக்கை!!!

**சி.சீதா**
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு.

## பகை

வெற்றியோ தோல்வியோ

எதுவரினும் கடமையைச்

செய்வோம், யார்

பாராட்டினாலும்,

கவலை வேண்டாம், நமது

திறமையும், நேர்மையும்,

வெளியாகும் போதும்

பகைவனும் நம்மை

மதிக்கத் தொடங்குவான்...

## கல்வி

கடவுளுக்கு தரும்

காணிக்கையை விட

ஒரு ஏழைக்கு தரும்

கல்வி மேலானது...!

அறிவை தேடி ஓடுங்கள்

நாளைய வரலாறு உங்கள்

நிழலாக தேடி ஓடி வரும்...

**கா.ராகுல்**

இரண்டாம் ஆங்கலத்துறை.

## தொலைதூரக் காதல்

எத்தனை பேருக்கு தெரியும்

தொலைதூர காதல் என்பது - என்

அம்மாவுக்கும் அடகு கடையில் இருக்கும்

என் தோடுக்கும் இருப்பதென்று

காத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

இருவருமே

அவர்கள் காதலை என் கல்வியால்

மீட்டெடுப்பேனென்று!!!

**சே.மோனிஷா**
முதுகலைத் தமிழ் முதலாமாண்டு.

## தோழி

அவள் என் தோழி

அவள் என் துணையானவள்

என்னிடம் ஆயிரம்

சண்டையிட்டாலும்

மீண்டும் என்னிடத்தில்

ஓர் தாயை தேடும்

பிள்ளைப்போல்

ஓடி வந்தணைப்பவள்

அவளே....

**க.ஜெயசிரியா**
முதுகலைத் தமிழ் முதலாமாண்டு.

## தனிமை

இரவின் அமைதியில்
என் மனசு மட்டும் பேசிக்கொண்டே
இருக்கும்...
சுற்றிலும் பலர் இருந்தாலும்
என் உள்ளம் ஏதோ வெறுமையே உணரும்....

சிரிப்பு முகத்தில் இருக்கும்
ஆனால் உள்ளத்தில சிறு வலி
மறைந்திருக்கும்...
யாரிடமும் சொல்ல முடியாத
சில கதைகள் இதயத்தில் உறங்கிக் கொண்டே
இருக்கும்...
தனிமை என்றால்
யாரும் இல்லாத நிலை அல்ல...
எல்லோரும் இருந்தும் என்னை
புரிந்து கொள்ள யாரும் இல்லாத நிலை தான்...

**மு.கனிமொழி**
இரண்டாமாண்டு இயற்பியல்துறை.

## தனிமை

நான் தேடும் தனிமை வரமாய் இருக்கும்
என்னை தேடும் தனிமை சாபமாகும்
தனித்தன்மையை உணரும் போது
தனிமையின் நேரத்தில் தன்னை
மீட்டெடுக்க கற்றுக்கொள்கிறோம்.
சிலர் தனிமையே இனிமை
என்று சொல்வார்கள்
பலர் கொடுக்கும் என்று அழுவார்கள்
தனித்து நிற்கும் போது தான் தெரிகிறது,
தனிமை மட்டும் தான்
நிறும் என்று

**பி.திலோத்தம்மா**
முதலாண்டு கணினிஅறிவியல்துறை.

## விழுந்து எழு

விழுந்தால் தோல்வி என்று யார்
சொன்னார்?
விழுந்த இடத்தில் எழுந்தால் அது
வெற்றி!
புயல் வந்தாலும் மலை அசையாது,
உறுதியான மனம் என்றும் தளராது
இருள் நீண்டாலும்,
விடியல் வராது போகாது
முயற்சி இருக்கும் மனிதனிடம்
வெற்றி தூரம் போகாது..

**ர.விஷ்ணுபிரியா**
இளங்கலை ஆங்கிலம் இரண்டாமாண்டு.

## மறக்கப்படும் நன்மை

நீ விளைத்த நன்மைகள்
எண்ணிலடங்காதவையாக
இருந்தாலும்
அவை காற்றோடு கலந்து
மறைந்து போகும் இந்த உலகில்
நீ அறியாமல் செய்த ஒரு சிறு
தவறு கூட
காலத்தின் நெடுகிலும்
எதிரொலித்து கொண்டே
இருக்கும்

**வ.வாணிஸ்ரீ**
முதலாண்டு

## "அப்பாவை விட வேறு சொந்தம் இல்லை"

"அப்பாவை தேடும் மகளின் கண்கள்"
உலகத்தில் எத்தனை சொந்தங்கள்
இருந்தாலும்
என் கண்கள் தேடுவது
என் அப்பாவை மட்டும் தான்

"கண்கிளில் கோபத்தை காட்டி நடிப்பவர் அப்பா"
கண்ணில் கோபத்தையும்
இதயத்தில் பாசத்தையும் வைத்திருக்கும்
ஒரே உறவு
என் அப்பா மட்டும் தான்

**கு.தனலட்சுமி**
முதலாமாண்டு கணினி துறை.

# தொலை நோக்குப் பார்வை

ஒருநாள் ஒரு துறவு தன் சீடனை காட்டிற்கு அழைத்து சென்றார் தன் சீடனை பார்த்து நான் உனக்கு ஒருசெயலை செய்து காட்டுகின்றேன் என்று கூறிவிட்டு ஒரு துணியை எடுத்து தன் கண்களை கட்டிக் கொண்டார். அதன் பின்பு வில்-அம்பை எடுத்து, தூரத்தில் இருக்கும் ஒரு மரத்தை குறிபார்த்து எய்தினார். அந்த அம்பு மரத்தில் படாமல் தூரமாக சென்று விழுந்தது. உடனே சீடர் சிரித்தார். சீடர், தன் குருவிடம் நீங்கள் சரியாக அம்பை எய்திவிடுவீர்கள் என்று நினைத்தேன், ஆனால் அம்பு தவறியதை பார்த்ததும் எனக்கு சிரிப்பு வந்து விட்டது. இதைக்கேட்டதும் குருவான துறவி, இதை தான் நான் உனக்கு கற்று கொடுக்க நினைத்தேன். தெளிவு இல்லாத இலக்கை, நல்ல முயற்சி இல்லாமல் நம்மால் அமைய இயலாது. நம் இலக்கு என்னவென்று தொலைநோக்கு பார்வையுடன் தெரிந்தால் மட்டுமே நம் இலக்கை, நம்மால் அடைய முடியும் என்று துறவி சீடனிடம் கூறினார். அதைப்போல் நாமும் தொலை நோக்குப் பார்வையுடன் நம் இலக்கை அடைவோம்.

**வெ.கனீஷ்கா**
எம்.ஏ., ஆங்கிலம் முதலாமாண்டு.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு

குறிப்புச்சட்டகம்

முன்னுரை

சுற்றுச்சூழலின் முக்கியத்துவம்

சுற்றுச்சூழல் மாசடைதல்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிமுறைகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்கள்பங்கு

முடிவுரை

**முன்னுரை**

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

என்பது பழமொழியாகும். சுற்றுசூழல் தூய்மையாக இருந்தால் தான் நாம் ஆரோக்கியமாக இருக்க முடியும். சுற்றுப்புற சுழலானது பல காரணங்களால் மாசடைந்து வருகின்றது. அதனைப் பாதுகாப்பது நமது முக்கிய கடமை அகும். இக்கட்டுரையில் "சுற்றுச்சூழல் பாதுகாப்பு" குறித்துக் காணலாம்.

சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் :

"பசுமையான பூமி மனிதனுக்கு தரும் சிறந்த வாழ்க்கை" என்ற பொன்மொழிக்கேற்ப வளமான சுற்றுச்சூழல் மனிதர்களை ஒரு போர்க்கவசம்போன்று பாதுகாக்கின்றது. "இயற்கையோடு இணைந்து வாழ்" என்பதற்கேற்ப நாம் சுற்றுச்சூழலை பாதுகாத்து இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும். சுற்றுச்சூழலினை முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

**சுற்றுச்சூழல் மாசடைதல் :**

நம்மைச் சுற்றுயுள்ள சுற்றிச்சூழல் நிலம், நீர், காற்று என அனைத்தும் மாசடைந்து வருகின்றன. நிலமாசு என்பது தொழிற்சாலை கழிவுகள் நிலத்துடன்

கலப்பதாலும், இரசாயனப் பொருட்கள் நிலத்துடன் கலப்பதாலும் ஏற்படுகின்றது. நீர்நிலைகளில் தொழிற்சாலைக் கழிவுகளை கலத்தல் போன்ற செயல்களால் நிரானது மாசடைகின்றது.

**காற்றானது வாகனங்கள்** ;

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுப் புகையினால் மாசுபடுகின்றது. இதனால் புவியின் வெப்பம் அதிகரிப்பதால் நில வறட்சி, கடல் மட்டம் அதிகாரிப்பு பனிக்கட்டி உருகுவது போன்றவை அதிகரித்துள்ளது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிமறைகறைகள் ;**

"நம் நட்டின் தூய்மை நமக்கெல்லாம் பெருமை" என்ற பொன்மொழிக்கு ஏற்ப நாம் சுற்றுச்சூழல் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும்.

மரம் நடுவது, காடுகள் வளர்ப்பது சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுகளை வெளியேற்றுவது, அதிக மாசுபாட்டை உண்டாக்கும் திட்டங்களை கைவிடுவது இவற்றால் மட்டுமே சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியும் நெகழிப்பயன்பாட்டை குறைக்க வேண்டும். இயற்கை உரங்களையே பயன்படுத்த வேண்டும்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்கள் பங்கு ;**

மாணவர்கள் தனது வீடு, பள்ளி மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். மரங்களை நடவேண்டும். நெகிழி ஒழிப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மட்கும் மற்றும் மட்காத குப்பைகள் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். குப்பைத் தொட்டிகளில் குப்பைகளைக் கொட்டுமாறு மக்களை அறிவுறுத்த வேண்டும்.

**முடிவுரை :**

நாம் செய்யும் எந்த ஒரு செயலும், சுற்றுச்சூழலை பாதிக்காமல் செய்து நம் வருங்கால சந்ததியிடம் ஒப்படைப்பது நம் அனைவரின் கடமை என்பதை நினைவில் வைத்துகொள்வது அவசியம் "மரம் நடுவோம் ! மழை பெறுவோம் ! மாசு இல்லாத சுற்றுச்சூழலை உருவாக்குவோம்" என்பதை என்றும் மனதில் கொள்ள வேண்டும்.

**ரா.வினோதினி**
முதலாமாண்டு கணிதவியல் துறை

# இயற்கை பூமியின் அழகும் வாழ்வின் ஆதாரமும்

குறிப்புச்சட்டகம்

- முன்னுரை
- இயற்கையின் அழகும் அற்புதமும்
- இயற்கையின் வளங்கள்
- மனித வாழ்வில் இயற்கையின் பங்கு
- இயற்கையும் மனிதனும்
- இயற்கையின் முக்கியத்துவம்
- சுற்றுச்சூழல் பிரச்சினைகள்
- இயற்கையை பாதுகாப்பது நமது கடமை
- முடிவுரை

**முன்னுரை**

இந்த உலகில் மனிதன் பணத்தால் வாங்க முடியாத ஒன்று இயற்கை. அது கடவுள் மனிதனுக்குக் கொடுத்த அரிய பரிசாகும். மலைகள் காடுகள், நதிகள், கடல்கள், மரங்கள், பறவைகள் ஆகிய அனைத்தையும் கடவுள் கொடுத்த இயற்கையின் அற்புதங்கள். மனிதன் வாழ்வதற்கு தேவையான அனைத்தையும் இயற்கை தன்னலமின்றி வழங்குகிறது. எனவே இயற்கை மனித வாழ்வின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

**இயற்கையின் அழகும் அற்புதமும் :**

காலை நேரத்தில் உதிக்கும் சூரியன் பூமியை ஒளியால் நிரப்புகிறது. பசுமையான மரங்கள் காற்றில் அசைந்து நம்மை வரவேற்கின்றன. மலர்கள் மணம் வீசி மனதை மகிழ்விக்கின்றன. பறவைகள் இனிமையாகக் கூவி இயற்கையின் இசையை உருவாக்குகின்றன. மலைகள், ஆறுகள், காடுகள் ஆகியவை இயற்கையின் அழகை மேலும் உயர்த்துகின்றன.

"பசுமை மரங்கள் ஆடும் போது,

மலர்கள் சிரிக்கும் போதும், இயற்கை

ஓர் உயிரோவியமாக மலர்கிறது."

**இயற்கையின் வளங்கள் :**

இயற்கை மனிதனுக்கு எண்ணற்ற வளங்களை வழங்குகிறது. நிலம், நீர், காற்று, கனிமங்கள், காடுகள் அகியவை இயற்கையின் முக்கிய வளங்களாகும். நிலம் விவசாயத்திற்கு உதவுகிறது. நீர் மனிதனின் அன்றாட வாழ்விற்கு மிகவும் அவசியமானது. காடுகள் மரப்பொருட்களையும் பல உயிரினங்களின் வாழ்விடங்களையும் வழங்குகின்றன.

**மனித வாழ்வில் இயற்கையின் பங்கு :**

மனிதன் இயற்கையின்றி வாழ முடியாது. நாம் சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர், உண்ணும் உணவு அனைத்தும் இயற்கையிலிருந்தே கிடைக்கின்றன. மரங்கள் நமக்கு ஆக்சிஜனை வழகுகின்றன. மழை விவசாயத்திற்கு மிகவும் அவசியமானது. எனவே மனித வாழ்க்கை முழுவதும் இயற்கையையே சார்ந்துள்ளது.

"காற்றும் நீரும் தரும் இயற்கை மனித

வாழ்வின் உயிர் மூச்சாகும்"

**இயற்கையும் மனிதனும் :**

பழங்காலங்களில் மனிதர்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தனர். அவர்கள் காடுகளை மதித்து பாதுகாத்தனர். இயற்கையை தெய்வமாக கருதி வழிப்பட்டனர். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதன் இயற்கையை புறக்கணித்து வருகின்றன. இதனால் பல சுற்றுச்சூழல் பிரச்சினைகள் உருவாகின்றன.

"மனிதன் இயற்கையின் ஒரு பகுதி,

அதை காக்கும் போது தான்

வாழ்வு முழுதீ"

**இயற்கையின் முக்கியத்துவம் ;**

இயற்கை மனித வாழ்வின் அடிப்படை இயற்கை இல்லாமல் பூமியில் உயிர்கள் வாழ முடியாது. மரங்கள் காற்றை தூய்மைப்படுத்துகின்றன. மழை

விவசாயத்திற்கும் குடிநீருக்கும் உதவுகிறது. இவ்வாறு இயற்கை உலகின் சமநிலையை பாதுகாக்கிறது.

"மரங்கள் நிறைந்தால் பூமி பசுமை
பசுமை இருந்தால் வாழ்க்கை
இனிமை"

சுற்றுச்சூழல் பிரச்சனைகள் :

இன்யை உலகில் மனிதன் வளர்ச்சியின் பெயரில் இயற்கையை அதிகமாக பாதித்து வருகின்றான். காடுகள் வெட்டப்படுகின்றன. காற்று நீர், நிலம் ஆகியவை மாசுபடுகின்றன. இதனால் உலக வெப்பமயமாதல், காலநிலை மாற்றம் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

"இயற்கையை அழித்தால் உலகம்
அழியும்
அதை காத்தால் வாழ்வு மலரும்"

இயற்கையை பாதுகாப்பது நமது கடமை :

இயற்கையை பாதுகாப்பது ஒவ்வொரு மனிதரின் கடமை ஆகும். நாம் அதிகமாக மரங்கள் நட வேண்டும். நீரை வீணாக்காமல் சேமிக்க வேண்டும். சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் இயற்கையை பாதுகாக்க முடியும்.

"ஒரு மரம் நட்டு பசுமை வளர்ப்போம்
இயற்கையை காத்து உலகை
காப்போம்"

முடிவுரை :

இயற்கை மனிதனுக்கு கிடைத்த மிகப் பெரிய வரமாகும். அது நமக்கு வாழ்க்கையையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது. எனவே நாம் இயற்கையை பாதுகாப்பது நம் எதிர்கால தலைமுறைக்கான பொறுப்பாகும்.

"இயற்கை காக்கும் மனிதன் வாழ்வான்
இயற்கை அழித்தான் மனிதன் அழிவான்"

**அ. ஜோதிலட்சுமி**
இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை.

## இயற்கை மனிதனின் வாழ்க்கைத் தாய்

இயற்கை என்பது மனித வாழ்க்கையின் அடிப்படை ஆதாரமாகும். மனிதன் வாழ்வதற்கு தேவையான காற்று, நீர், மண், மரங்கள், மலைகள், நதிகள், கடல்கள் போன்ற அனைத்தையும் இயற்கை வழங்குகிறது. உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் இயற்கையின் மீது தான் நம்பி வாழ்கின்றன. மனிதன் இயற்கையின் ஒரு பகுதியாக இருந்தாலும், அவன் வாழ்க்கை முழுவதும் இயற்கையை சார்ந்தே உள்ளது.

### இயற்கையின் அழகு :

இயற்கை மிகவும் அழகானதும் அற்புதமானதுமாகும். பசுமையான காடுகள், உயர்ந்த மலைகள், ஓடும் நதிகள், கடல்கள், மலர்கள், பறவைகள் ஆகியவை இயற்கையின் அழகை வெளிப்படுத்துகினறன. காலையில் உதிக்கும் சூரியன், மாலையில் மறையும் சூரியன், மழை பெய்யும் காட்சி போன்றவை மனதிற்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றன.

### மனிதனுக்கு இயற்கையின் முக்கியத்துவம் :

மனிதன் வாழ்வதற்கு தேவையான அனைத்து வளங்களையும் இயற்கை வழங்குகிறது. மரங்கள் நமக்கு ஆக்சிஜன் அளிக்கின்றன. நதிகள் மற்றும் மழைநீர் விவசாயத்திற்கு உதவுகின்றன. மண் உணவு பயிர்சிகளை வளர்க்க உதவுகிறது. எனவே இயற்கை மனித வாழ்க்கையின் அடித்தளமாக இருக்கிறது.

### இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் :

இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை சுற்றுச்சூழல் சத்தமாக இருந்தால் மனிதர்களும் ஆரோக்கியமாக வாழ முடியும். காற்று, நீர், மற்றும் மண் மாசுப்படாமல் இருப்பது மிகவும் அவசியம், இயற்கையை பாதுகாப்பது சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்குச் சமம்,

### இயற்கைக்கு மனிதனால் ஏற்படும் பாதிப்பு :

இன்றைய காலத்தில் மனிதர்கள் வளர்ச்சியின் பெயரில் இயற்கையை

அதிகமாக அழித்து வருகின்றனர். காடுகள் வெட்டப்படுகின்றன. தொழிற்சாலைகளின் புகையால் காற்று மாசுபடுகிறது. குப்பைகள் காரணமாக நீர் மாசுபடுகிறது. இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகரித்து வருகிறது,

## இயற்கையை பாதுகாப்பது எப்படி :

இயற்கையை பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். மரங்களை நட்டல், நீரை வீணாக்காமல் பாதுகாத்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்தல், சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்தல் போன்ற செயல்கள் மூலம் இயற்கையை பாதுகாக்கலாம் மேலும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மிகவும் முக்கியம்.

## இயற்கையின் நன்மைகள் :

இயற்கை மனிதனுக்கு பல நன்மைகளை அளிக்கிறது. இது உணவு, காற்று, நீர் போன்ற அடிப்படை தேவைகளை வழங்குகிறது. மேலும் மனதிற்கு அமைதி, ஆரோக்கியமான வாழ்கை மற்றும் அழகான சூழலை வழங்குகிறது.

## இயற்கையை நேசிப்பது அவசியம் :

இயற்கையை நேசித்து பாதுகாப்பது மிகவும் முக்கியம், நாம் இயற்கையை காப்பாற்றினால் அது நம்மை காப்பற்றும், எதிர்கால தலைமுறைகளும் இயற்கையில் நன்மைகளை அனுபவிக்க நாம் இன்று அதை பாதுகாக்க வேண்டும்.

## முடிவு :

முடிவாக இயற்கை மனித வாழ்க்கையின் மிகப்பெரிய செல்வமாகும். இயற்கை இல்லாமல் மனித வாழ்க்கை சாத்தியமில்லை எனவே இயற்கையை பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். நாம் அனைவரும் இயற்கையை நேசித்து பாதுகாத்தல் உலகம் அழகனதும் ஆரோக்கியமானதுமான இடமாக இருக்கும்.

**வீ.சோனியா**

இரண்டாமாண்டு கணிதவியல்துறை.


## உழவனின் பெருமை...

பருவமழை பொய்த்தாலும்
நிலத்தைப் பண்படுத்த
கலங்காதவன் இவன்
வருணன் தாடிக் கரிசனம்
காட்டினாலும்
அவனை வஞ்சிப்பதில்லை
சால் கட்டி விதை வீசி
வியர்வைத் துளிகள் தூவும்போது,
உழும் நேரத்தில்
உலா வரும் பறவைகளுக்கும்
பங்கீட்டு வாழ்வான்
விளைநிலம் இன்று
விலைநிலமாக மாறும்
தருணத்தில் கூட
உயிர்காற்றை இழந்தால்
தவிப்பதும் இவனே
பலன் குறைந்தாலும்
பயிர்களிடத்தில்
வியக்கும் அன்பு கொண்டவன்
மானுடம் வளர்க்கும் தாய்க்கு
ஓரிரு பிள்ளைகள் தான்
ஆனால் - இவனுக்கோ
கோடி பிள்ளைகள்
உழவுக்கு நன்றி சொல்லும்
உயிர்களின் உலகம் முழுவதும்

## உயிரை உரமாக்கும் உழவன்

மண்ணில் விதை போடுகிறான்
மனதில் நம்பிக்கை
விதைக்கிறான்
தன் உயிரையே உரமாக்கி
உலகை வாழவைக்கிறான்.
கை கட்டி படைப்பை காண்போரை விட
கை கட்டாமல் படைப்பை
உருவாக்குவான்.
அவனே உண்மையான
படைப்பாளன்....

**சஞ்சய் வளவன்**
முதலாமாண்டு சமூகவியல் துறை.



**மா.லட்சுமணன்**

முதலாமாண்டு தமிழ்த்துறை



**ஜா.பெனடிக்ட்**
மூன்றாமாண்டு கணிதவியல்



**மா.ஸ்ரீதர்**

முதலாமாண்டு தமிழ்த்துறை.



**மா.ஸ்ரீதர்**
முதலாமாண்டு தமிழ்த்துறை



**ம.லட்சுமணன்**
முதலாமாண்டு தமிழ்த்துறை



**ச.ரோசினி**

முதலாமாண்டு தமிழ்த்துறை



**பா.முசேபா**
முதலாமாண்டு தமிழ்த்துறை



**ஜெ.காவியா**

மூன்றாமாண்டு வணிகவியல்துறை



**S.மீனாட்சிசுந்தரம்**

இரண்டாமாண்டு இயற்பியல்துறை



**பெ.சுப்ரஜாஸ்ரீ**

மூன்றாமாண்டு இளங்கலை தமிழ்த்துறை



**ம.லட்சுமணன்**
முதலாமாண்டு தமிழ்த்துறை





**மா.ஸ்ரீதர்**

முதலாமாண்டு தமிழ்த்துறை



**சி.யாழ்மொழி**
மூன்றாமாண்டு இளம் அறிவியல் கணிதவியல்

Phone : 04346 - 246212
E-mail : prucaspappireddipatti @gmail.com
Wecsite : https://www.gascprp.in

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## பாப்பிரெட்டிப்பட்டி - 636 905.

## தருமபுரி மாவட்டம்.



# ஆண்டு மலர் 2025 – 2026

# முப்பெரும் விழா

















# கலைத்திருவிழா

















# முப்பெரும் விழா

